மாலை 47 மணி 2 பிப்ரவரி 2005 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## சிவராத்திரி விரத மகிமை

- நிறைமதி

## கடமைதவறா கருநிறத்தான்

- ஏ.எம்.ஆர்.

## தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை

- முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்களின் கட்டுரைத் தொடர் ஆரம்பம்

## அன்னதானம்

- "எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்

## நாங்கூர் திவ்ய தேசங்கள்

## வாட்டங்கள் போக்கும் வைத்திய வீரராகவப் பெருமாள்

திருவள்ளூர்



With Best Compliments from

## POPPYS HOTEL (P) LTD.

**Discover the pleasure of doing business for a greener cleaner world**

**3 star cottage type Hotel**

Thirumuruganpoondi, Avanashi Road, Tirupur,
Tel. : 042101 ( 8 Lines) Fax : 04296-272100
E-mail : pophotel@md4.vsnl.net.in

## POPPYS TOURS PRIVATE LTD.

In the Pearl of the Knit City
**A Gem of a Travels**

Contact :

**Head Office**
**Poppys Tours Private Ltd.,**
SF. No. 547, M.P. Nagar,
Kongu nagar Extn.
Tirupur- 641 607
Phone : 22285555 / 2228577
Fax : 2228566
E-mail : poppystour@eth.net

**Branch Office**
**Poppy Tours Private Ltd.,**
P.A. Building 1st Floor,
42, Venkata Krishna Road,
Raja Annamalai Puram,
Chennai - 600 028.
Phone : 044-24956920

Approved agent
Indian Airlines,
Jet Airways,
International Tickets,
Visas,
Passport

## *Hotel Vinayaga*

Kumaran Road,
Near Railway Station,
Tirupur - 641 601.
Ph : 2236673, 2236674, 2236675

www.Poppysonline.com




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 தாரண - தை
மாலை-47 மணி -2 பிப்ரவரி 2005


# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி" *(குறள் 390)* என்பது திருக்குறள்.

இத்திருக்குறள் உணர்த்தும் குணங்களைப் பூண்டு, வேந்தர்க்கு ஒளியாகத் திகழும் நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள், சுனாமித்தாக்குதலால் கதிகலங்கிப் போன கடலோரப் பகுதி மக்களுக்கு, மிக விரைந்து நிவாரண உதவிகளை வழங்கி அவர்களின் இருண்ட வாழ்வில் மீண்டும் ஒளிவிளக்கேற்றி வைத்து வருகிறார்கள்.

மாசிமாதத்திற்குப் பெருமை சேர்ப்பது மாலயன் தேட சிவபெருமான், ஆதியந்தம் இல்லா அருட்பெருஞ்சோதியாகக் காட்சியளித்த இரவான சிவராத்திரி ஆகும். இச் சிவராத்திரி விழாவை - விரதத்தைச் சிறப்பிக்கும் கட்டுரையை வாசகர்கள் பெரிதும் விரும்பி வரவேற்பர் என நம்புகிறேன்.

"எழுத்துச் சித்தர்" பாலகுமாரன் அவர்கள், தாம் திருக்கோயில்களில் நேரில் கண்டு மகிழ்ந்த அன்னதானப் பெருமைகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் கட்டுரை வாசகர்களைப் பெரிதும் மகிழ்விக்கும் என்பது திண்ணம்.

"ஜோதிடச் சக்கரவர்த்தி" ஏ.எம்.ஆர். அவர்கள் "கடமை தவறா கருநிறத்தான்" ஆகிய சனீஸ்வரனிடம் கண்ண பெருமானும் ஏழரைச் சனியின் போது கண்டு கலங்கிய துன்பத்தைத் தமக்கே உரித்தான சுவையான நடையில் விவரித்திருப்பது வாசகர்களுக்குப் பெருவிருந்தாக அமையும் கட்டுரையாகும்.

"தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை" எனும் புதிய கட்டுரைத் தொடரைச் "செந்தமிழ்வாரிதி" முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்கள் இவ்விதழில் தொடங்கியுள்ளார்கள்.

அருட்பிரகாச வள்ளலார் 1867ஆம்ஆண்டிலேயே ஆன்மீக இதழ்களின் அருமையை உணர்த்தும் வகையில் "சன்மார்க்க விவேக விருத்தி" எனும் ஆன்மிகத் திங்கள் இதழ் தொடங்கினார் என்ற சுவையான தகவலுடன் "காலச் சுவடுகள்" பகுதி இடம் பெற்றிருப்பதும் வாசகர்களைப் பெரிதும் கவர்வது திண்ணம்.

வழக்கம்போல் சுவைமிகு நீதிக்கதைகள், ஆர்வத்தைத் தூண்டும் கேள்வி-பதில்கள், மனநிறைவைத் தரும் ஏராளமான துணுக்குகள் - இவ்விதழை அலங்கரிக்கின்றன.

ஆன்மீகக் கருவூலமாய் வெளிவரும் பிப்ரவரி திருக்கோயில் இதழ், அனைவருக்கும் ஒரு பக்திப் பெரு விருந்து என்பதில் ஐயமில்லை.

அன்புள்ள


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
*119 உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

**ஜி. இராமகிருஷ்ணன்** இ. ஆ. ப.,
ஆணையாளர்


## இதழின் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுனாமி நிவாரணப் பணிகள் | 2 |
| 2. | அன்னதானம் - "எழுத்துச் சித்தர்" **பாலகுமாரன்** | 3 |
| 3. | வாட்டங்கள் போக்கியருளும் வைத்திய வீரராகவப் பெருமாள் | 6 |
| 4. | திருஞானசம்பந்தருக்கு நந்தி விலகி அருளிய திருத்தலம் | 8 |
| 5. | காலச்சுவடுகள் : அருட் செல்வர் வள்ளலார் தொடங்கிய ஆன்மிகப் பத்திரிகை | 10 |
| 6. | சிவராத்திரி விரத மகிமை - **நிறைமதி** | 11 |
| 7. | குகைநமச்சிவாயரும், குருநமச்சிவாயரும் | 14 |
| 8. | மகாபாரதம் - முனைவர் **த. அமிர்தலிங்கம்** | 15 |
| 9. | குழந்தைவரம் நல்கும் தங்கத் தொட்டில் பிரார்த்தனை | 18 |
| 10. | திருவிளையாடல் புராணம் - **இரா. அரங்கசாமி** | 20 |
| 11. | தமிழிசை வளர்த்த சீர்காழி மூவர்-**பு.ஏ.இராமையா**, இ.ஆ.ப. | 23 |
| 12. | இராமரிடமே யுத்தம் புரிந்த ஆஞ்சநேயர் | 25 |
| 13. | தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - முனைவர் **இரா. செல்வக்கணபதி** | 26 |
| 14. | வினை தீர்க்கும் விருட்சங்கள் - **பா. பாஸ்கரன்**, பி.எஸ்.சி., பி.எல். | 28 |
| 15. | சிற்பிக்கு அருள் புரிந்த சிங்கார வேலன் | 30 |
| 16. | கேள்வி - பதில் | 31 |
| 17. | திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் **டி.வி. வெங்கட்ராமன்**, இ.ஆ.ப., (ஓய்வ) | 32 |
| 18 | அருள்மிகு பாண்டவ தூதப் பெருமாள் - **ஏ.கிருஷ்ணன்** | 35 |
| 19. | நாலாயிரத்தில் நாங்கூர் திவ்ய தேசங்கள் - **ஜி.இராஜநாயகம்**, பி.எஸ்.சி.,பி.எல். | 37 |
| 20. | கடமைதவறா கருநிறத்தான் - **ஏ.எம்.ஆர்.** | 39 |









## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுனாமி நிவாரணப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் கடலோரப்பகுதி கிராமங்களுக்கு விரைந்து சென்று போர்க்கால அடிப்படையில் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

நம் இந்து சமய அறநிலையத்துறையின் திருக்கோயில்களின் சார்பில் ரூ.11,22,034 நிவாரண நிதியாக மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்குகிறார்கள். உடன் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் உள்ளார்கள்.





# அன்னதானம்

அன்றைக்குக் காலை நிலநடுக்கம் பற்றி மக்கள் பீதியுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே அவர்களைத் தாண்டி வேறு வேலைக்குப் போக வேண்டிய நிர்பந்தம் எனக்கு ஏற்பட்டது. திருவல்லிக்கேணிக்குக் கடற்கரைச் சாலை வழியாக போய்விடலாம் என்று முடிவெடுத்தபோது கடற்கரைச்சாலை அடைபட்டு இரண்டாம் முறையாக கடல் தண்ணீர் உள்ளுக்குள் வந்து கொண்டிருந்தது. நல்ல மேடாக இருக்கின்ற சாந்தோம் மாதா கோவிலில் இரண்டு பக்கமுள்ள தெருக்களிலிருந்து தண்ணீர் பொங்கி உள்ளுக்குள் வருவதைப் பார்க்க முடிந்தது.

இந்தச் சாலையிலேயே இவ்வளவு வேகமாகத் தண்ணீர் வந்தால் கடற்கரைக்கு ஓரமாக இருக்கிற குப்பம் என்னவாகும்? சீனிவாசபுரம் என்னவாகும் என்று சிந்தித்துக் கொண்டே வண்டி ஓட்ட, ஜனங்கள் அலறி அடித்துக்கொண்டே "இன்னும் அலை வருகிறது இன்னும் அலை வருகிறது" என்று ஓடினார்கள்.

நான் மேடேறினேன். அந்தப் பேரழிவிலிருந்து எவரையும் காப்பாற்ற வலுவின்றி ஜனங்கள் மிரண்டு ஓடுவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அடுத்த ஒரு மணிநேரத்தில் அழிவு பெரியது என்ற செய்தி வந்தது. அடுத்து இரண்டு மணிநேரத்தில் அழிவு மிக மிகப்பெரியது என்று செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. மனம் ஒடிந்து போயிற்று.

ஏன் இப்படி, எதனால் இப்படி என்று சுனாமி தாக்கிய பல இடங்களுக்கும் போய்ப் பார்க்க ஜனங்களின் கதறல் நெஞ்சைப் பிளந்துபோட்டது. தாங்கவே முடியாத சோகம். மிகப்பெரிய நரபலி என்பதை பிற்பகல் நேரத்தில் புரிந்து கொண்டேன்.

ஒன்றிரண்டா? பலநூறா?, ஆயிரமா? கரையோரக் களப்பலிகள் கணக்கில் அடங்கா... என்று யோசிக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் லட்சத்தைத் தாண்டிவிட்டன என்று பயமுறுத்தின.

ஆனால் தவித்த அந்த ஜனங்களுக்கு நகரத்தில் பத்திரமான இடத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் உதவிசெய்ய முன்வந்ததைக் கண்ணாரப் பார்த்து நெகிழ்ந்தேன். அப்படி அலறித் துக்கத்தில் தேறி, நாலாபுறமும் பித்துப் பிடித்ததுபோல ஓடுகின்ற ஜனத்திற்கு முதலில் தேவையானது என்ன?

ஆறுதலான வார்த்தைகள். பிறகு...

அளவான உணவு. மிக அருமையான உணவு வகைகள் அன்று மாலைநேரம் மடமடவென்று வினியோகிக்கப்பட்டதை நான் பார்த்தேன். பல பெரிய ஹோட்டல்கள், பதினைந்தாயிரம், இருபதாயிரம் என்று பொட்டலங்களைக்

- "எழுத்துச் சித்தர்"
**பாலகுமாரன்**



# அருட்பிரகாச வள்ளலார்

## அறிவுறுத்திய அன்னதானம்



*பசி என்கின்ற நெருப்பானது வறியவர்களது உடலினுள் பற்றி எரிகின்ற போது உணவால் அவிக்கின்றது தான் அருளாகும்.*

கொண்டுபோய் எல்லாப் பக்கங்களிலும் வினியோகித்ததை என்னால் பார்க்க முடிந்தது.

"காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடலிங்க". வாய் நிறைய சாம்பார் சாதம் வைத்துக்கொண்டு அழுதபடியே பேசிய ஒரு இளைஞன் இன்னும் என் மனதுக்குள் நிற்கிறான்.

அந்தச் சாம்பார் சாதம் தான் அவன் உடல் வலுவைப் பெருக்கி, உயிர் அசைவை நிறுத்தி அவனை மேற்கொண்டு பல பேருக்கு உதவிகள் செய்ய வைத்தது. அவன் சொந்த இழப்புகளைப் பற்றி கவலைப்படாமல் மற்ற இழப்புகள் ஏற்படாமல் இருக்க இரவு முழுவதும் அலைந்தான்.

ட்ரம், ட்ரம்மாய் தேனீரும், பிளாஸ்டிக் குவளைகளும் கொண்டு வரப்பட்டு சகலருக்கும் வினியோகப்படுத்தப்பட்டன.

ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் சொன்னது ஞாபகம் வந்தது.

தானத்தில் மிகவும் சிறந்தது அன்னதானம். ஏனெனில் அந்த அன்னதானம் தான் உலகத்திலுள்ள எல்லா சுகங்களையும் சாப்பிடுபவனுக்குக் கொண்டு வந்து கொடுக்கிறது. அந்த அன்னம் இல்லையெனில் அவனால் எந்த சுகத்தைப் பற்றியும் நினைத்தும் பார்க்க முடியாது. எனவே, வாழ்க்கையில் நொந்து போகிறவனுக்கு முதலில் உணவு கொடு. பிறகு நலம் விசாரி. பொன்,பொருள், வாகனம் எல்லாவற்றையும் விட மனிதனுக்கு அன்னமானது முழுமையான திருப்தியை அளிக்கிறது. போதுமான அன்னம் எல்லோருக்கும் கிடைத்தால் மக்கள் பரஸ்பர ஹிம்சை, களவு, துரோகம், கோபம் முதலான கெடுதல்களிலிருந்து விடுபட்டவராய் விளங்குகிறார்கள். உலகில் சாந்தி நிலைபெறும் என்று சொல்லப்படுகிறது.

உணவினுடைய அவசியத்தையும், அன்னதான மகிமையையும் இந்தச் சுனாமி பேரழிவிலிருந்து நான் புரிந்து கொண்டேன்.



வடலூரில் வள்ளலார் ஏற்றிவைத்த அணையா அடுப்பு

எது அன்னதானம்?

நாமே சமைத்து, நமக்குத் தெரிந்தவர்களுக்கு வினியோகிப்பது அன்னதானமா? சில இடங்களில் அப்படி நடைபெறுவதை பார்த்திருக்கிறேன்.

வேதத்தில் அன்னதானம் பற்றி அதிகம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மணிமேகலையில் ஆபுத்திரன் என்ற ஒரு கதாபாத்திரம் வருகிறது. அந்த ஆபுத்திரன் மதுரையில் சிந்தா தேவியான சரஸ்வதிதேவியின் கோயில் வாசலையே தன் இருப்பிடமாகக் கொண்டு தினமும் பிச்சைப் பாத்திரத்தை கைகளில் ஏந்திக்கொண்டு இளகிய மனமுடைய செல்வந்தர்களான கிரகஸ்தர்கள் வாழும் மதுரை மாநகர் வீதிகளில் சுற்றித்திரிந்து யாசித்தான்.

அவ்வாறு கிடைத்த பிச்சை உணவையும் காணார், கேளார், கால்முடம்பட்டோர், பேணுநரில்லோர், பிணிநடுக்குற்றோர் யாவரும் வருகவென்றிசைத்துடனூட்டிப் பிறகு தான் உண்டதாக மணிமேகலையில் எழுதப்பட்டிருக்கிறது.

பிச்சை எடுத்தும் பிறருக்கு உணவளிக்கலாம் என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்கிறோம்.



## நவக்கிரக நாயகர்கள் எழுந்தருளும் பெருமாள் திருக்கோயில்கள்

சென்னை, அடையாறு - அனந்த பத்மநாப சுவாமி கோயில்

திருச்சி இரயில்வே ஜங்சன் - அனுமார் கோயில்

குடியாத்தம் - வரதராஜப் பெருமாள்கோயில்

சோழவந்தான் - ஸ்ரீராமபிரான் சன்னதி

மதுரை- 1) கூடலழகர் கோயில்

2) சௌராஷ்டிரர் கிருஷ்ணன் கோயில்

3) ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில்

திருவொற்றியூர் (காலடிப்பேட்டை) - வரதராஜப்பெருமாள் கோயில்

பெத்தநாயக்கன்பாளையம் - லஷ்மி நரசிம்ம சுவாமி கோயில்

ஆனால், அந்த ஆபுத்திரன் இரவுநேரம் உறங்கிக் கொண்டிருக்கையில் பசியோடு சிலர் வந்து அவனிடம் உணவு இருக்குமா என்று கேட்டுக் கையேந்தினார்கள். ஆனால், ஆபுத்திரனிடம் உணவு இல்லை; என்ன செய்வது என்று அவன் மனம் கலங்கினான்.

அந்த மனக்கலக்கத்தை அவன் அமர்ந்த கோயிலுக்குள்ளே இருந்த சிந்தாதேவியானவள் மனம் கனிந்து இரங்கி அவனுக்கொரு அட்சயபாத்திரம் கொடுத்தாள்.

அது எப்பேர்பட்ட அட்சய பாத்திரம்! "வாங்குநர்கையகம் வருந்துதலல்லது தான் தொலைவில்லாத் தகைமையது என்று அமைவது".

அதாவது வாங்குபவர்கள் கைகள் வலிக்குமேயன்றி இந்தப் பாத்திரத்தில் அன்னம் வற்றாது என்று கூறி அவன் வருத்தத்தை சிந்தாதேவி நீக்கினாள்.

பிற்பாடு அந்த அட்சயப் பாத்திரம் பல்வேறு காரணங்களால் மணிமேகலை என்ற பெண்ணிடம் வந்து அடைந்ததை மணிமேகலைக் காவியம் கூறும்.

"உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற கொள்கை மிகத் திறம்பட இந்தக் காவியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உரத்தக் கூச்சலில்லாமலும், கோபமில்லாமலும் அலட்டல் இல்லாமலும் , அகம்பாவம் இல்லாமலும் உணவிடவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதிதி என்பவன் தேவன் என்று கூறப்படுகிறது. அதேபோல உணவு உண்பவன் அந்த உணவை உண்டுவிட்டு "அன்னதாதா சுகிபவ" என்று சொல்ல வேண்டும். வாழ்த்த வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிறது.

அன்னமிட்டவன் சுகமாக இருக்கட்டும் என்று மனம் நிறைய வாழ்த்த வேண்டும் என்பது இதன் பொருள். நிச்சயமாக நன்றாக உண்டவனுடைய மனம் அதை இயல்பாகச் செய்யும். இதை நான் இன்றைய கோவில்களில் கவனித்திருக்கிறேன்.

தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அன்னதானத் திட்டத்தின் கீழ் மக்கள் உணவருந்துவதை நான் தினம் போகும் முண்டகக்கண்ணியம்மன் கோவிலிலும், மயிலை கபாலீஸ்வரர் கோயிலிலும் கவனித்திருக்கிறேன்.

இது தேவையற்ற திட்டம், உண்பவர்கள் சோம்பேறிக்கூட்டம் என்றெல்லாம் பலர் காதுபட விமர்சித்தார்கள். ஆனால் அது உண்மையல்ல. நடக்க முடியாத தொண்டு கிழவிகளும், இளம் சிறார்களும், நோயுற்றவர்களும், ஊனமுற்றவர்களும் தான் அதிகம்.பகல்நேரம் வந்து உணவருந்திவிட்டுப் போகிறார்கள் என்று தெள்ளத்தெளிவாகக் காண்கிறேன். அப்படி உண்கின்ற சிலரை நான் உற்றுப்பார்த்திருக்கிறேன். கை நடுங்கச் குழம்புச் சோறும், ரசம் சாதமும், மோர் சோறும் சாப்பிடுகின்ற அந்தக் கிழவிக்கு இந்தத் திட்டமில்லையெனில் வேறு யார் உணவளிப்பார்கள் என்ற கேள்வி எனக்குள் எழுவதுண்டு. இந்தக் குழந்தைகள் இப்படி வயிறார சாப்பிடுகின்றனவே!. இப்படிப்பட்ட உணவு அவர்களுக்கு வேறு எங்கு கிடைக்கும் என்ற எண்ணமும் எனக்கு எழுந்ததுண்டு.

அவர்கள் "இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தும் இந்து சமய அறநிலையத்துறை வாழ்க!" என்று கோஷமிடவில்லை. ஆனால் ஒரு ஏப்ப சத்தம் அந்த வாழ்த்தொலியாக வெளிவருவதை நான் கண்டிருக்கிறேன். மிகத் திருப்தியாக அவர்கள் கை கழுவிப் போகும்போது அந்த நிறைவு, அந்த சந்தோஷம் இதற்கு யார் காரணமானவரோ அவரை நிச்சயம் வாழ்த்தும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

அன்னதானம் ஒரு உன்னதமான விஷயம். உங்களால் முடிந்தஅளவு உணவிட வேண்டுமென்ற எண்ணத்தைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

உணவு கொடுக்கும் போது உயிர் மட்டுமல்ல. உலகத்திலுள்ள பல சுகங்களை அந்த உணவின் மூலம் அந்த உணவு உண்பவருக்கு நீங்கள் தருகிறீர்கள். எனவே அதேவித சுகங்கள் உங்களையும் வந்து அடையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

கோபமில்லாமல், அலட்டல் இல்லாமல் உணவு மற்றவருக்கு தானமாகக் கொடுக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் பழக்கத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். அடுத்த தலைமுறைக்குக் கற்றுத்தரவேண்டும்.

★

# வாட்டங்கள் போக்கியருளும் வைத்திய வீரராகவப் பெருமாள்



தமிழகத்தின் தலைநகரம் சென்னைக்கு மேற்கில் 50 கி.மீ. தொலைவில் சென்னை-அரக்கோணம் ரயில் பாதையில் உள்ளது திருவள்ளூர் என்னும் திவ்விய சேத்திரம்.

இங்கு புஜங்கசயனத்தில் சேவைசாதிக்கிறார் வைத்திய வீரராகவப் பெருமாள். தாயார் கனகவல்லித் தாயார் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் இருவரும் 12 பாசுரங்களால் வீரராகவப் பெருமானைப் போற்றியுள்ளனர்.

சென்ற 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருட்பிரகாச வள்ளலார் தம் வயிற்றுவலி தீர்த்தருளிய வைத்திய வீரராகவ பெருமாளைப் போற்றிப் "போற்றித் திருப்பஞ்சகம்" என்கிற 5 பதிகங்கள் பாடியுள்ளார்.

இத்திருத்தலத் திருக்குளத்தில் நீராடிய அளவில், நம் இதயத்தில் எழும் தகாத ஆசைகள் யாவும் அழிந்து விடும். தீராத பிணிகள் யாவும் தீர்ந்து விடும்.

இத்தகைய அற்புதத் திருக்குளம் "ஹிருத்-தாப நாசினி" என்று வழங்கப்படுகின்றது.

ஒரு திருத்தலத்தில் முதலில் திருக்கோயில் அமைத்தபிறகே திருக்குளம் அமைப்பது மரபாக உள்ளது.

ஆனால் இத்திருத்தலத்தில் முதலில் திருக்குளம் உண்டாகி அதில் தை அமாவாசை தோறும் தேவர்களும், ரிஷிகளும் வந்து நீராடிப் புண்ணியம் பெற்றுச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது.

யுகங்களில் முதல் யுகமான கிருதயுகத்திலேயே "ஹிருத்தாபநாசினி" எனும் இத்திருக்குளம் தோன்றியுள்ளது.

இத்திருக்குளத்தின் நீர்வளத்தால் தீஞ்சுவைக்கனிமரங்கள், மூலிகைச் செடிகள், சுகந்தம் நல்கும் புஷ்பக்கொடிகள், விலங்கினங்கள், பறவைஇனங்கள் என அனைத்தும் நிறைந்து செழித்தன.

இத்தகைய வனத்தையும், ஹிருத்தாப நாசினி தீர்த்தத்தையும் கண்டு வியப்புற்றார் சாலிஹோத்ரர் எனும் முனிவர் ஒருவர், தீர்த்த யாத்திரையாக வந்தவர் இக்குளத்திற்கு வந்த நாள் தைஅமாவாசையாக அமைந்துள்ளது.

தேவர்களும், முனிவர்களும் கொண்டாடும் திருக்குளம், திருக்கோயில் இன்றி இருப்பதா? என எண்ணி எல்லாம் வல்ல ஆதிமூலமான பரம்பொருள் இங்குக் கோயில் கொள்ள வேண்டித் தவம் இருக்க முற்பட்டார் சாலஹோத்ர முனிவர்.

ஹிருத்தாபநாசினி திருக்குளத்தில் நீராடி அங்கேயே ஒரு பர்ணசாலை அமைத்து தவத்தைத் தொடங்கினார் தை அமாவாசை நாளன்று.

தவத்தைத் தொடங்கும் முன் ஒரு வேளை உணவு உட்கொள்ள எண்ணி, நெல்மணிகளைப் பொறுக்கி, உமிநீக்கி, அதை மாவாக்கினார் முனிவர்.

சாலிஹோத்ரமுனிவரின் இருதயத்தில் உண்டான வேட்கையை உணராமல் போவாரா பரம்பொருள்? உடனே அவர் வயோதிகர் வடிவம் பூண்டு மிகுந்த



பசியுடனும், களைப்புடனும் முனிவரின் பர்ணசாலைக்கு எழுந்தருளினார்.

வயோதிகரை வாஞ்சையுடன் அமரவைத்து மாவினை அவருக்குப் படைத்தார். அவர் பசி அடங்காதவராய் "இன்னும் மாவு கிடைக்குமா"? எனக்கேட்க சாலிஹோத்ரமுனிவர் தாம் உண்ண வைத்திருந்ததையும் அவருக்கே படைத்துத் தவத்தில் மூழ்கிவிட்டார்.

ஓராண்டுத் தவம் முடிந்து மீண்டும் தை அமாவாசையில் தியானம் களைந்து எழுந்தார் சாலஹோத்ரர். ஹிருத்தாப நாசினியில் நீராடினார். இறைவனுக்குப் படைக்க மீண்டும் நெல்மணியை பொறுக்கி உமி நீக்கி மாவாக்கினார்.

அப்போது அதிதியாய் வந்தருளினார் பரம்பொருளான திருமால். வயோதிக அந்தணராய் தம் திருக்கோலம் மறைத்து வந்த திருமால், தமக்குப் படைத்த மாவினோடு, முனிவர் உண்ண வைத்திருந்த மாவையும் கேட்டுப் பசியார உண்டு விட்டார்.

"ஐயா! பசி தீர்ந்தது. இங்கே படுக்கக் கொஞ்சம் இடம் வேண்டும். எவ்வுள் படுப்பது?" என் று வினவினார்.

சாலிஹோத்ரர் தாம் அமைத்திருந்த பர்ணசாலையின் உட்புறத்தைக் காண்பித்தார்.

வந்த முதியவர் பர்ணசாலையின் உள்ளே சென்று அங்கிருந்த மண்மேடையில் தென்திசையில் தலைவைத்துப் படுத்தார். குளிரானது அவர் உடலை நடுக்கியது.

அதைக் கண்ட சாலிஹோத்ரர் தாம் ஆடையாக அணிந்திருந்த மரவுரியை முதியவருக்கு போர்த்திவிட்டு வெளியே வந்த போது நிகழ்ந்தது அற்புதம்.

துந்துபி வாத்தியங்கள் முழங்க, கந்தர்வர்கள் கானம் இசைக்க, அப்சரமங்கையர் ஆனந்த நடனம் புரிய, தேவர்கள் மலர்மாரி பொழிய, சாலிஹோத்ர முனிவருக்குத் திருமால் தம் திவ்விய திருக்கோலத்தைக் காட்டியருளினார்.

"சாலிஹோதர முனிவரே! உம்மிடம் முதியவராய் வந்து அன்னதானம் கொண்டதுயாமே! உமக்கு யாது வரம் வேண்டும் கேளும்" என்றார்.

முனிவர் கண்களில் நீர் பனிக்க, திருமாலின் அருகில் மண்டியிட்டார்.

"ஐயனே! உம்மைத் தரிசித்து பிறவி பெற்ற புண்ணியம் யான் பெற்றேன். உலக மக்களை உய்விக்க நீர் இந்தப் பர்ணசாலையிலேயே எப்போதும் எழுந்தருளியிருக்க வேண்டும். இக்குளத்தில் நீராடி உமை வணங்கும் பக்தர்களுக்குப் பிணிகள் யாவும் தீர்த்தருளி வைகுந்தம் தந்தருளவேண்டும்" என்று வணங்கி நின்றார்.

"உம் சிரசின் மீது ஆணை. இங்கு உமக்குக் காட்சியளித்த இப்புஜங்க சயனத்திருக்கோலத்தில் மக்களுக்குத் தரிசனம் அளித்து அவர்தம் பிணிகளையும் பாவங்களையும் போக்கியருளுவேன்" என்று திருமால் சாலிஹோத்ர முனிவரின் உச்சந்தலையில் தம் கை பதித்து உறுதியளித்தார்.

திருமால் விரும்பிப் பள்ளி கொண்ட சாலிஹோத்ர முனிவரின் பர்ணசாலையே அவர் வீற்றிருக்கும் கருப்பக் கிரகமாய் மாறியது.

## கண்ணாரக் காண்க

*அர்ச்சனை முடிந்து கற்பூர தீப ஆராதனை காட்டும் போது பூஜையின் நிறைவில் சோடச தீபாராதனைகள் காட்டும்போது கண்களை மலர விழித்துத் தீபவொளியில் இறைவனின் திருமேனி அழகைக் கண்ணாரக் கண்டு தரிசிக்க வேண்டும். ஆனால் பலரும் அச்சமயம் கண்களை மூடி ஜபிப்பதை தவிர்க்க வேண்டும்.*

பெருமான் "எங்கே படுப்பது" என்று கேட்கும் விதமாக "எவ்வுள் உறைவது?" என்று வினவியபடியால் "திருஎவ்வுள்" எனப் பெயர்பெற்றது; அந்தத் "திருஎவ்வுள்ளூர்" இன்று திருவள்ளூர் என அழைக்கப்படுகின்றது.

தம்மைத் தரிசிக்கும் பக்தர்களின் பிணிகளைப் போக்கியருளும் பெருமாள் "வைத்திய வீரராகவப் பெருமாள்" எனப் போற்றப்படுகின்றார்.

வைத்திய வீரராகவப் பெருமாள் புஜங்க சயனக்கோலத்தில் பக்தர்களுக்குத் தரிசனம் வழங்குகின்றார். தென்திசையில் தலை வைத்து, வடதிசையில் திருவடிகளை நீட்டியுள்ளார். பெருமாளின் இடதுகரம் நான்முகனுக்குப் பிரணவ மந்திரம் உபதேசிக்க, வலதுகரம் சாலிஹோத்ர முனிவரின் தலையில் பொருந்தி அபயம் அளிக்கின்றது.

சாலிஹோத்ர மகிரிஷி போர்த்திவிட்ட மரவுரியை நினைவுபடுத்தும் வகையில் பெருமாளின் திருமேனியை காவிக்கட்டங்களைக் கொண்ட பதினெட்டுகஜ நீள ஆடை அலங்கரிக்கின்றது.

தர்மசேனபுரத்தை ஆண்ட தருமசேன மகாராஜாவிற்கு, மகாலட்சுமியின் அம்சமான வசுமதி பெண்ணாக அவதரித்தார். வைத்திய வீரராகவர் வசுமதியைக் காதல் கொண்டு அரசனின் அனுமதியோடு கல்யாணம் செய்து திருஎவ்வுள்ளூருக்கு அழைத்து வந்ததாகத் தலபுராணம் கூறுகின்றது.

இவ்வசுமதி, "கனக வல்லித்தாயாராக" தனிக்கோயில் கொண்டு விளங்குகின்றார். கனகவல்லித் தாயாரைத் தொழுதால் பக்தர்களின் சர்ப்பதோஷம் நீங்குகின்றது. ஸ்ரீவேதாந்த தேசிகர் கனகவல்லித் தாயாரின் பேரில் முப்பது சுலோகங்களைக் கொண்ட "ஸ்ரீஸ்துதி" பாடியுள்ளார்.



ஒவ்வொரு அமாவாசையன்றும் எண்ணிலடங்கா பக்தர்கள் திரண்டு வந்து திருவள்ளூர் வைத்திய வீரராகவப் பெருமாளையும், கனகவல்லித் தாயாரையும் வழிபட்டு வரம் பெறுகின்றார்கள்.

தை அமாவாசையன்று வீரராகவப் பெருமாள் சாலிஹோத்ர முனிவருக்குக் காட்சியளித்ததால் தைமாதம் பூரட்டாதி நட்சத்திரத்தில் தொடங்கிப் பத்துநாட்கள் பிரம்மோற்சவம் கொண்டாடப்படுகின்றது. இதுவன்றி சித்திரைமாதம் சித்திரை நட்சத்திரத்தில் தொடங்கிப் பத்துநாட்கள் இன்னொரு பிரம்மோற்சவமும் கொண்டாடப்படுகின்றது. இவ்வாறு ஒரு ஆண்டில் இரு பிரம்மோற்சவம் கொண்டாடப்படுவதும் இத்திருக்கோயிலில் காணப்படும் விசேஷமாகும்.

# திருஞானசம்பந்தருக்காக நந்தி
## விலகி அருளிய திருத்தலம்

கோயில் நகராம் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே எட்டுகிலோமீட்டர் தொலைவில் பட்டீச்சுரம் அமைந்துள்ளது. தேவாரப்பாடல் பெற்ற சிவத்தல வரிசையில் காவிரியின் தென்கரையில் அமைந்த 23-வது திருத்தலமாகும். கிழக்கு நோக்கித் திருக்கோயில் ஐந்து கோபுரங்களுடன் காட்சியளிக்கிறது. இத்திருக்கோயிலில் பல்லவர், சோழர், நாயக்கர், மராட்டியர் காலக் கலையின் பரிணாம வளர்ச்சியைக் காணலாம்.

விநாயகர் - அருள்மிகு ஆக்ஞா கணபதி

இறைவன் - அருள்மிகு தேனுபுரீஸ்வரர், ம் ர வஸ்டீட் ப

இறைவி - அருள்மிகு பல்வளை நாயகி, அருள்மிகு ஞானாம்பிகை

தலமூர்த்தம் - அருள்மிகு தபஸ் அம்மன்

தல விருட்சம் - வன்னிமரம்

தீர்த்தம் - ஞானவாவி, கோடி தீர்த்தம் எனும் இராமர் தீர்த்தம்

வழிபட்டோர்- பராசக்தி, காமதேனுவின் மகள்பட்டி, இராமர், விசுவாமித்திரர்

பாடிய அருளாளர் - திருஞானசம்பந்தர், இராமலிங்க அடிகளார்

புராணங்கள் - பட்டீஸ்வர மகாத்மியம் (வடமொழி)

பட்டீச்சர பதிற்று பத்து அந்தாதி

பட்டீச்சர புராணம் (முழுமையாக இல்லை)



அன்னை பராசக்தியானவள் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்த பழம்பதி; காமதேனு விரும்பி வாழ்ந்த தலம், தேவலோகப்பசுவான காமதேனுவின் பெண் மக்கள் நால்வருள் பட்டியால் பூஜிக்கப்பட்ட தலம். இராவணனைக் கொன்றதனால் ஏற்பட்ட சாயாஹத்தி மற்றும் பிரம்மஹத்தி என்னும் கொலைப்பாவம் நீங்க ஸ்ரீ இராமபிரான் சிவலிங்கப் பிரதிஸ்டை செய்து சிவபூஜை செய்த சிறந்த தலம். இராமேஸ்வரத்துக்கு இணையான தலம். விசுவாமித்திரருக்குக் காயத்ரி எனும் மகாமந்திரம் சித்திக்கப்பெற்று பிரம்மரிஷிப்பட்டம் கிடைக்கப் பெற்ற தலம். மேதாவி முனிவரால் தர்மசர்மாவுக்கு ஏற்பட்ட நாயின் வடிவம் நீங்கப்பெற்ற தலம். திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் அளித்தது;

திருஞானசம்பந்தர் திருவலஞ்சுழியை வணங்கிப் பழையாறைப் பதியை வணங்குவதற்கு நடந்து சென்று, வழியில் உள்ள ஆறைமேற்றளித் தலத்தை வணங்கிய பின் தேவியார் வழிபட்ட திருசக்திமுற்றத்திற்கு வந்து பெருமானை வழிபட்டார். பிறகு பக்கத்திலுள்ள பட்டீச்சுரம் சென்று வணங்குவதற்கு அடியார்களுடன் புறப்பட்டார். அப்பொழுது சூரியன் மிதுனராசியில் பிரவேசிக்கின்ற

முதுவேனிற்காலமாதலால் வெயிலின் கொடிய வெப்பத்தைத் தணிக்க பட்டீச பெருமான் திருஞானசம்பந்தருக்கு பூதகணங்கள் மூலமாய் அழகிய முத்துப்பந்தலை அனுப்பி வைத்தார். பூதகணங்கள் தாங்கிச் சென்று திருஞானசம்பந்தருக்குத் தெரியாதபடி அவரது திருமுடிக்கு மேல் முத்துப்பந்தலைப் பிடித்து பெருமான் அருளியதையும் கூறினர். சம்பந்தர் இறைவன் திருவருளை வியந்து பணிந்து போற்றி முத்துப்பந்தலின் நிழலில் வந்தார்.



தேவர்கள் பூமழை பொழிந்ததால் முத்துப்பந்தல் பூப்பந்தல் போல இருந்தது. முத்துப்பந்தலின் நிழல் அம்பலத்தில் பெருமான் தூக்கிய திருவடி நிழல் போல் விளங்கியது. தொண்டர்கள் கூட்டம் ஆரவாரம் செய்தது. மறைகள் முழங்கின. அடியார் கூட்டம் எதிர்கொள்ள திருஞானசம்பந்தர் முத்துப்பந்தலின் நிழலில் பட்டீஸ்வரத்திற்கு வந்தார். அப்பொழுது அந்த அற்புதக் காட்சியை காணவும், தம்மைத் திருஞானசம்பந்தர் தரிசிக்கவும் பெருமான் நந்திதேவரை விலகும்படி கட்டளை இட்டார். நந்தி விலகியது. இதன் காரணமாக முன்கோபுரத்தை அடுத்துள்ள நந்தியும் உள் மண்டபத்தில் உள்ள நந்தியும் விலகியுள்ளன. திருஞானசம்பந்தர் கோவிலின் உள்ளே புகுந்து வலம்வந்து பட்டீஸ்வரரை வணங்கி "பாடல்மறை" எனத் தொடங்கும் பதிகம் பாடினார். இதனை நினைவு கூரும் வகையில் முத்துப்பந்தல் விழா ஆண்டுதோறும் ஆனிமாதம் முதல்தேதியில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் தாயுமான அடிகளார் விழா

*அன்பர் பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந் தெய்தும்;பராபரமே!*

- தாயுமானவர்



திருச்சிராப்பள்ளி மாநகரின் மத்தியில் காவிரிநதியின் வடகரையில் அமைந்துள்ளது மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலே திருச்சி மாநகரின் சின்னமாகவும் விளங்குகிறது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தாயுமானவரை வழிபட்டு அவரது திருவருளால் அவதரித்தவர் அடிகளார் தாயுமானவர் ஆவார்.

உலகம் முழுவதும் போற்றக் கூடிய இன்சுவை ததும்பும் அரிய தத்துவப் பாடல்களை உயர்ந்த பேரின்ப நிலையில் பாடிய மகான் ஆவார். சிறுவயதிலேயே இறையருளால் ஈர்க்கப்பட்டு அரிய சித்தாந்த, வேதாந்த கருத்துக்கள் நிறைந்த ஞானப்பாடல்களைப் பாடியுள்ளார். தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இவரது பாடல்கள் 1450-ஆகும்.

தாயுமானவர் பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி, எந்நாள்கண்ணி, ஆனந்தக்களிப்பு என்று பகுதியில் அரிய கருத்துக்களை எளிமையாகப் பாடியுள்ளார். தத்துவமசி வாக்கியம் என்ற தலைப்புகளில் 16 தத்துவ மந்திரங்களையும் அருளியுள்ளார். தத்துவமுறைமை என்ற தலைப்பில் 27 தத்துவக் கண்ணிகளைப் பாடியுள்ளார். இவர் பக்திநெறியில் தத்துவங்களுக்கு முதலிடம் தந்துப் பாடியவர்.

தாயுமானவர் இல்வாழ்க்கையும், அரசபதவியையும் துறந்து, தலங்கள் தோறும் சென்று வழிபட்டார். இராமநாதபுரம் சென்றடைந்த தாயுமானவர் பலநாள் உணவின்றி நிஷ்டையில் ஆழ்ந்தார். இறுதியில் இராமநாதபுரம் அருகில் உள்ள லஷ்மிபுரத்தில் தாயுமானவர் முக்தி அடைந்தார். இவர் முக்தி அடைந்த தை விசாகதினத்தை இவரது முக்திப் பெருவிழா- முத்தமிழ் விழாவாக சிறப்பாக 1.2.2005 மற்றும் 2.2.2005 ஆகிய இருதினங்களில் மிகவும் சிறப்பாக மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு ஜி.இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்களும், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வை.பாண்டியன், இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தலைவர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

1.2.2005 அன்று தாயுமானவர் படத்திறப்பு, தாயுமானவர் பாடல்கள் முற்றோதுதல், ஓங்காரனந்தா சுவாமிகள் சொற்பொழிவு ஆகியவையும், 2,2,2005 அன்று டாக்டர் சோ.சத்திய சீலன் அவர்களது தலைமையிலான கருத்தரங்கமும் நடைபெற்றன. மாலை தருமபுரம் சுவாமிநாத ஓதுவார் அவர்களின் கச்சேரியும், தாயுமான அடிகளுக்கு அபிஷேக ஆராதனை மற்றும் திருவீதி உலா சிறப்பாக நடைபெற்றது மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி , கட்டுரைப்போட்டி பாடல்ஒப்புவித்தல் போட்டி ஆகியன நடைபெற்றன.

தகவல் : **திருமதி சி.கல்யாணி,** எம்.எல்.,
உதவி ஆணையர் - செயல் அலுவலர்

காலச்சுவடுகள்

# அருட்பிரகாச வள்ளலார் தொடங்கிய ஆன்மிகப் பத்திரிகை



வள்ளல் பெருமானின் கையெழுத்து





சித்தி வளாகத்தில் உள்ள
அணையா ஜோதி

வள்ளலார் தமது சன்மார்க்கக் கொள்கையைப் பரப்புவதற்காக "சன்மார்க்க விவேக விருத்தி" என்னும் மாத இதழ் ஒன்றை 1867 இல் தொடங்கினார்.

137 ஆண்டுகளுக்கு முன்பு, பத்திரிகை தோன்றத் தொடங்கிய ஆரம்பக் காலத்திலேயே அருட்பிரகாச வள்ளலார் ஒரு ஆன்மிக இதழைத் தொடங்கினார் என்பது நாம் அனைவரும் அறியவவேண்டிய ஒரு அரிய நிகழ்ச்சியாகும்.

இந்த இதழுக்கு முதல் சந்தாதாரராக ரூ.1 செலுத்திக் கையொப்பமிட்டுள்ளார் அருட்பிரகாச வள்ளலார்.

சந்தாதாரராக சம்மதம் தெரிவித்த 49 பேருள் ஒருவராகப் பரங்கிப்பேட்டை காதர் சாயபு என்ற முஸ்லீம் அன்பர் ஒருவரும் ஓரணா சந்தா செலுத்திக் கையொப்பம் இட்டுள்ளார்.

இவ்விதழுக்காக அப்போது செய்யப்பட்டுள்ள விளம்பரம் இங்கு நாம் அறிந்து மகிழ்வதற்கு உரியது.

*"சற்குருவே நம"*

*"சன்மார்க்க விவேக விருத்தி" விளம்பரம்*

*அறிவுடைய நண்பர்க்கு அன்போடு வந்தனம் செய்து அறிவிக்கை.*

*நண்பர்களே!*

*உலகில் வாழும் பிறப்புகளுள் உயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்ட நாம் அனைவரும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருளின் அனுபவங்களைக் காலமுள்ள போதே அறிந்து அனுபவித்தல் வேண்டும்.*

*அங்ஙனம் அறிந்து அனுபவிப்பதற்குச் 'சன்மார்க்க விவேக விருத்தியே' சாதனம் ஆதலின் அதனையடைவதற்குத் தக்க நன்முயற்சிக்கோர் முன்னிலையாகச் 'சன்மார்க்க விவேக விருத்தி' என்னும் பத்திரிகை ஒன்றை வழங்குவிக்கும் நிமித்தம் இதனடியில் நம்மால் இயன்ற அளவில் மாதந்தோறும் பொருளுதவி செய்வதற்காகக் கையொப்பமிட்டு மேற்குறித்த வண்ணம் நமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வழங்குவிப்போமாக.*

*இங்ஙனம்*
*சன்மார்க்க சங்கத்தார்*

இத்திங்கள்இதழ் வள்ளலாரால் எவ்வளவு காலம் நடத்தப்பெற்றது என அறியமுடியவில்லை.



# சிவராத்திரி விரத மகிமை

- நிறைமதி



மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மகா சிவராத்திரி என்று வழங்கப்படுகிறது.

வேதங்களில் சாம வேதமும், நதிகளில் கங்கையும், ஐம்பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் தேவேந்திரனும் சிறப்பு பெற்று விளங்குவதைப் போலவே விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம் ஆகும்.

சிவபெருமான், திருமால், பிரம்மா காணத் திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றிய இராத்திரியே சிவராத்திரி ஆகும்.

**"அரியும் யானும் முன் தேடும் அவ்**
**அனற்கிரி அனல**
**கிரி எனும்படி நின்றதால்**
**அவ்வொளி கிளர்ந்த**
**இரவதே சிவராத்திரி**
**ஆயினது! இறைவர்**
**பரவி உய்ந்தனர் அன்னதோர்**
**வைகலிற் பலரும்"**

எனவரும் கந்தபுராணப் பாடலில் பிரமதேவர் "திருமாலும் நானும் திருவண்ணாமலையில் தேட, சிவபெருமான் ஒளிப் பிழம்பாக நின்ற இரவே சிவராத்திரியாகும். அச்சிவ இராத்திரியில் இறைவரை அனைவரும் வழிபட்டு உய்ந்தனர்" என்று கூறியிருப்பதைக் காண்கிறோம்.

சிவராத்திரி குறித்து மேலும் இரு வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. உமாதேவியார் தம் வளைக்கரத்தால் சிவபெருமானின் திருக்கண்களை மூடி மறைத்த குற்றம் தீர, ஆகம விதிப்படி சிவபிரானை நான்கு யாமங்களிலும் பூசித்து வழிபட்ட ராத்திரியே சிவராத்திரி என்றும் கூறப்படுகிறது. திருப்பாற்கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றிய போது, சிவபெருமான் அதனை உண்டு தம்மிடற்றில் அதனை அடக்கியருளிய ராத்திரியே சிவராத்திரி எனவும், அவ்விரவில் தேவர்கள் சிவபெருமானைப் போற்றி வழிபட்டதைப் போலவே மாந்தரும் வழிபட்டுய்ய வேண்டும் எனவும் கூறிப்படுகிறது.

சிவராத்திரி பற்றிய வரலாறுகள் இவ்வாறு பலவாறாகக் கூறப்படினும், சிவபெருமானின் பெருமையை இந்தச் சிவ ராத்திரியின் போது போற்றி உறங்காது விழித்திருந்து விரதம் இருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

**"சிவராத்திரி போது துயிலோம் என்ற விரதியர்"** என்பது தாயுமானவர் திருவாக்கு. சிவராத்திரி விரதப்பெருமையைச் சிவபெருமானே நந்திதேவருக்கு உணர்த்தியருள, அவரிடம் சூரியன், முருகன், எமன், மன்மதன், இந்திரன், அக்கினி, சந்திரன், குபேரன் முதலானோர் கடைப்பிடித்து நன்மைகள் பலவற்றை பெற்றுள்ளனர். இதனை

**"இந்தநல் விரதந் தன்னைச் சிவன் நந்திக்கு**
**இசைத்திட உணர்ந்து செங்கதிரோன்**
**கந்தவேள், கதைக்கை காலன், விற்காமன்**
**கடவுளர் கண்ணோர்ஆ யிரத்தோன்**
**செந்தமிழ்கடவுள், மதி, நிதிக் குபேரன்**
**செப்பிய வரன்முறை நோற்றுத்**
**தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்**
**தகைபெறு தலைவர் ஆயினரால்"**

என்ற பாடலால் அறிகிறோம்.

திருவாரூரை ஆண்ட முசுகுந்தன் என்ற மன்னனின் வரலாற்றோடு இணைத்துச் சிவராத்திரியின் பெருமை பேசப்படுவது இங்கே அறிய வேண்டிய அற்புத வரலாறாகும்.

ஒரு வில்வ மரத்தின் அடியில் சிவபெருமான் தம்

தேவியரோடு அமர்ந்து சிவராத்திரியன்று அளாவளாவிக் கொண்டிருந்த போது அம்மரத்தில் வாழ்ந்திருந்த குரங்கு ஒன்று தானும் தூங்காமல் அவ்விரவு முழுவதும் விழித்திருந்தது. தூக்கம் வராத அக்குரங்கு வில்வ இலைகளைப் பறித்து அவற்றை சிவபெருமானின்மேலும், உமாதேவியார் மேலும் போட்ட வண்ணம் இருந்தது. ஒரு இனம் புரியாத பக்தி உணர்வே அவ்வாறு செய்ய அக்குரங்கினைத் தூண்டியது எனலாம்.



சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் தூங்காமலிருந்த குரங்கு வீசிய வில்வ இலைகளை மகிழ்ந்து ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் அம்முசுக்கலையை (குரங்கு) முசுகுந்த சக்கரவர்த்தியாகப் பிறக்க திருவருள் புரிந்தருளினார்.

இறைவர் திருவருளால் சக்கரவர்த்தியாகும் பேறு பெற்ற அக்குரங்கும், இறைவனை சிவராத்திரியில் பூசித்துத்தான் பெற்ற திருவருளை உலகம் யாவும் உணர்ந்து கொள்ளும்பொருட்டு முசுகுந்தனாகத்தான் வாழும் காலத்திலும் குரங்கு முகத்துடனேயே வாழ்ந்திருக்க வேண்டும் என இறைவரைக் கேட்டுக் கொண்டது. இறைவரும் அவ்வாறே அருள்புரிய அக்குரங்கு முசுகுந்தச் சக்கரவர்த்தியாகத் தன் மறுபிறவியில் தோன்றிச் சோழர் குலத்தின் புகழ் இந்திர உலகத்திலும் பரவுமாறு சிறந்த ஆட்சியைப் புரிந்தமையை நமக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி முதலான நூல்கள் காட்டுவதனால் சிவராத்திரி விரதச் சிறப்பினை நாம் தெரிந்து கொள்ளலாம்.

குருத்ருகன் என்ற வேடன் ஒருவன் சிவராத்திரியின் போது அவனையும் அறியாமல் இருந்த விரதமே அவனை மறுபிறவியில் குகனாகப் பிறக்க அருள் புரிந்தது என்ற ஒரு வரலாறும் சிவராத்திரி விரதத்தின் பெருமையைக் காட்டுகிறது.

இனிநாம் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறையைச் சுருங்க அறிந்துகொள்வோம்.

சிவராத்திரிக்கு முதல்நாள் ஒருவேளை மட்டுமே உண்டு மனத்தூய்மையும் உடல் தூய்மையும் பேணி அன்றிரவு துயில வேண்டும். மறுநாள் சதுர்த்தசி அன்று விடிகாலையிலேயே துயிலெழுந்து நீராட வேண்டும்.

பிறகு திருக்கோயிலுக்குச் சென்று சிவ பெருமானைத் துதித்து வழிபட்டு அன்று பகல் முழுவதும் சிவ சிந்தனையோடும் சிவத் தியானத்தோடும் தூய்மையாக இருக்க வேண்டும். வீட்டில் பூசையறையைக் கோமயத்தால் மெழுகித் தூய்மை செய்து கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். மாலையில் சிவாலயம் மீண்டும் சென்று தரிசனம் செய்ய வேண்டும். பிறகு சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் அவரவர் இல்லங்களிலுள்ள பூசையறையில் சிவபெருமானை அபிசேக அலங்காரம் செய்து அர்ச்சித்து நிவேதனம் அளித்துப் பூசிக்க வேண்டும்.

சிவபெருமானுக்கு அபிசேகம் செய்யுங்கால் பால்,தயிர், தேன், சர்க்கரை, இளநீர், பன்னீர், எலுமிச்சம்பழம், சந்தனம், விபூதி, பஞ்சகவ்வியம்,பஞ்சாமிர்தம், கருப்பஞ்சாறு ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். சிவபெருமானின் அலங்காரத்திற்குச் சந்தனம், வில்வத்தளிர், தாமரைமலர், முல்லை மலர், குங்குமப்பூ, நந்தியாவர்த்தமலர் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

சிவபெருமானை முதல் யாமத்தின்போது தாமரை மலராலும், இரண்டாம் யாமத்தின் போது துளசி இலையாலும், மூன்றாம் யாமத்தில் வில்வத் தளிராலும், நான்காம் யாமத்தில் நீலோற்பல மலராலும் அர்ச்சனை செய்தல் வேண்டுமென ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

முதல் யாமத்தில் பயற்றம்பருப்புப் பொங்கல். இரண்டாம் யாமத்தில் பாயசம், மூன்றாம் யாமத்தில் எள்ளன்னம், நான்காம் யாமத்தில் சுத்தான்னம் நிவேதனம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு யாமத்திலும் தூப, தீப ஆராதனைகளைச் சிறப்புறச் செய்ய வேண்டும். இவ்வாறெல்லாம் முறைப்படி செய்ய இயலாமல் போனாலும், இயன்ற அளவு செய்து சிவபெருமானை மனம்,மொழி,மெய்களால் தியானித்து, இரவு முழுவதும் பூசித்து மறுநாள் காலை நீராடி பாரணை செய்து பிரசாதம் உண்ண நாமும் உய்வதோடு, நம்மூவேழு தலை முறையினரையும் உய்வித்து நலம் எய்தி வாழச் செய்யலாம்.

## வைணவக்கோயிலில் சிவராத்திரி விழா



தருமபுரிமாவட்டத்தில் ஊத்தங்கரைக்கு அருகாமையில் சாமரத்துப்பட்டி என்ற ஊரில் சென்றாய மலைமேல் அருள்மிகு சென்றாயப் பெருமாள் கோயில் உள்ளது.

இது பெருமாள் கோயில்தான். இக்கோயிலைக் கட்டிய மணியக்காரர் சிவபக்தர் என்பதால் இவ்வைணவத் திருக்கோயிலில் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

சிவராத்திரி அன்று அருள்மிகு சென்றாயப்பெருமாள் ஆலயத்திற்குச் சிறப்புப் பேருந்துகள் விடப்படுகின்றன.

மில்,ஜவுளி, சூட்டிங் சர்ட்டிங் ரகங்களுக்கு....

2265725

# லக்கி ஸ்டோர்ஸ்

**44/343, மெயின் பஜார்,**
**ஸ்ரீ கோட்டை மாரியம்மன் கோயில் அருகில்**
**சேலம் - 636 001.**



**திருக்கயிலாயம் மானஸரோவர் நேப்பாள் 18 நாட்கள்**
**விமானத் திருப்பயணம் கட்டணம் ரூ, 63,491/-**
**ஹெலிகாப்டரில் சென்றுவர 12 நாட்கள் மட்டுமே**
**மே முதல் செப்டம்பர் வரை பரதி மாதம் தோறும் புறப்படுகிறது.**

★ அமர்நாத் பனிலிங்கதரிசனம், 12 நாட்கள் (ஜூலை-ஆகஸ்ட்) ரூ. 5000/- (ஹெலிகாப்டர் வசதி உண்டு ) (ரயிலில்)
★ பிரதி மாதமும் 10 நாட்கள் பூரி, கோனாரக், புவனேஸ்வர், கொல்கத்தா, கயா, காசி, அலகபாத் ரூ. 4496/- (ரயிலில்)

**01. 06. 2005 & 15.09.2005 12** சோதிர்லிங்கம், பஞ்சதுவாரகை, பண்டரிபுரம், சீரடி, மும்பை, டெல்லி, ஆக்ரா, மதுரா, பத்ரிநாத், உஜ்ஜயினி, ஹரித்துவார், கொல்கத்தா, ரயிலில் 30 நாட்கள் ரூ. 14,999/-

- பிரதி மாதமும் ஸ்ரீ லங்கா சுற்றுலா, திருக்கேதீசுரம், திருகோணமலை, கதிர்காமம்-கண்டி, நல்லுர் கந்தசாமி
- கோயில், முனிஸ்வரம் சிவாலயம், கொழும்பு, நுவரேலியா மற்றும் பல இடங்கள் 7-இரவு, 8-பகல்
- பிரதி மாதமும் டெல்லி, ஆக்ரா, மதுரா, சிம்லா, குளுமணாலி 12-நாட்கள் ரு 5,999/- (ரெயில் சுற்றுலா)
- சிங்கப்பூர், மலேசியா, முக்திநாத், பஞ்சதுவாரகை, அந்தமான், இமயமலை சுற்றுலாக்களுக்கும் அணுகவும்

**மனோகர் டிராவல்ஸ்**
1433 ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ்,
அபிராமி தியேட்டர் அருகில், ஈரோடு - 11
Ph : 0424-2223580, Mobile : 94433-80159
E-mail : manohartravvles@rediffmail.com



**கைலாஷ் டிராவல்ஸ்**
11, வீராசாமி தெரு, எவரெஸ்ட் ஹோட்டல்
எதிர்ரோடு, பெரியமேட், சென்னை - 3
Ph : 52053923, Cell : 94433-80154, 98403-52142
E-mail : kailashtravels_chennai@rediffmail.com

**சிவகௌரி டிராவல்ஸ்**
26, MMY காம்ப்ளக்ஸ், காமராஜ் ரோடு,
பழைய பஸ்நிலையம் அருகில்,
திருப்பூர்-4
0421-5325800 செல் : 944433-80150

★கயிலைமணி இரா. நாராயணன்,திருச்சி. செல் : 94433-50152 ★ சிவத்திரு பிரிண்டெக்மணி, மதுரை. செல் : 94435-19314 ★ கயிலைமணி ஆறுமுகம், திருநெல்வேலி போன் : 2337035 ★ கயிலைமணி ஞானசேகர், மயிலாடுதுறை போன் : 251737 ★ கயிலைமணி காந்திமதி அம்மாள், திருவண்ணாமலை, போன் : 229842 ★ பொன்மலை டிராவல்ஸ் - கோவை செல் : 94430-83930 ★லட்சுமிகாந்த், பெங்களூர், செல் : 984151-26029 ★கயிலைமணி கார்த்திக், விழுப்புரம், செல் : 94433-80154

# குகை நமசிவாயரும், குரு நமசிவாயரும்

திருவண்ணாமலையில் மலையைச் சுற்றிஉள்ள குகைஒன்றில் ஒரு துறவி வசித்து வந்தார்.

குகையில் வசித்ததால் குகைநமசிவாயர் என்ற பெயர் இவருக்கு உண்டானது.

குகைநமச்சிவாயர் சித்திரை மாதத்துக் கொளுத்துகிற வெயிலில் மரத்தடியில் அமர்ந்திருந்தார் . சீடர் நமசிவாயர் குகை நமசிவாயருக்கு வெப்பம் நீங்க விசிறிக் கொண்டு இருந்தார்.

நல்ல உச்சிப் பொழுது மலையைச் சுற்றியிருந்த அந்த வெப்பமான வேளையில் யாரும் அருகே நடக்கவில்லை.

விசிறிக் கொண்டிருந்த சீடர் நமசிவாயர் திடீரென்று சிரித்தார்.

குகைநமசிவாயர் சுற்றும் முற்றும் பார்த்தார்

"யாரும் சந்தடியில்லை, ஏனப்பா சிரித்தாய்? எதற்காகச் சிரித்தாய்? எனக் கேட்டார்.

அதற்குச் சீடர் நமசிவாயம் சொல்லுகிறார்:

"திருவாரூரில் தியாகராஜரும் கமலாம்பிகையும் பவனி வருகின்றனர். அவர்கள் முன்னிலையில் ஒரு தாசி பரதநாட்டியம் ஆடுகிறாள். ஆடிவரும் போது ஒரு வாழைப்பழத் தோழிலே வழுக்கி விழுகிறாள். அதைக் கண்டு எல்லோருமே சிரித்தனர். நானும் சிரித்தேன்".

சீடர் நமசிவாயர் சொன்னதைக் கேட்டு குகைநமச்சிவாயர் வியப்புற்றார்.

தம்மைவிட இவர் பெரியவராக உள்ளாரே!. இவரை எப்படி சோதித்து அறிவது என்றெண்ணி ஒரு சோதனை செய்கிறார்.

"நமசிவாயா! நமக்கு வாந்திவருகிறது" என்றார். உடனே சீடர் நமசிவாயர் தமது இருகரங்களையும் ஏந்தினார்.

அவர் கரங்கள் நிரம்புகிற அளவிற்கு வாந்தி எடுத்ததும், குகை நமசிவாயர் நிறுத்திக் கொண்டார்.

திடீரென்று யாருக்கும் நினைத்ததும் வாந்தி வராது. வரும் வாந்தியையும் அளவோடு நிறுத்திக் கொள்வது என்பது முடியாது.

குகை நமசிவாயரோ திடீரென்று வாந்தி எடுத்தார். சீடர் நமசிவாயரின் குவிந்த கைகள் நிரம்பியதும் நிறுத்திக் கொண்டார்.

"பரமசிவாயா! நான் எடுத்த வாந்தியை மனிதர்களின் காலடி படாத இடத்தில் கொட்டிவிட்டு வா" என்றார்.

மனிதர்களின் காலடிபடாத இடம் எது? அது தன் வயிறுதான் என்று உடனாகத் தீர்மானித்து அவ்வாந்தியைத் தன் வாயின் வழியாக வயிற்றுக்குள் கொட்டிக் கொண்டார்.

பார்த்த குகைநமச்சிவாயர்

"அப்பனே நமசிவாயா! இனி நீர் குருநமசிவாயர் என நாமம் கொண்டு, தனியே மடம் அமைத்து மக்களை நல்வழிப்படுத்துவீராக!" என்று வாழ்த்தி விடை கொடுத்து அனுப்பிவிட்டார்.



# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

10

"செய்வனத் திருந்தச் செய்" என்ற பழமொழிக்கு ஏற்பவே பரந்தாமனாகிய கண்ணபெருமானும் செயல்பட்டு இருக்கிறார் என்பதைத்தான் பாரத காவியத்தின் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். இந்திரனை யாசிக்கச் செய்து, கர்ணனின் கவசகுண்டலங்களைப் பெற்றுக் கொண்டதன் மூலம் கர்ணனின் ஆற்றலைப் பேரளவிற்குக் குறைத்துவிடும் கண்ணபெருமான், மிஞ்சி கர்ணனிடம் எஞ்சி இருப்பதான நாகாத்திரமும் கர்ணனுக்குப் பயன்படாமல் போகச் செய்ய வேண்டும் என்பதற்காகவே குந்தியை கர்ணனிடம் சென்று வரம் கோரிப் பெற ஆலோசனை கூறி இருந்தார்.



ஆனால் கர்ணனைத் தன் மூத்த மகன் எனக் கண்டு கொண்ட தாய் குந்தியோ, கர்ணனிடம் வரம் கோரிப் பெற மனம் இடம் கொடுக்காத காரணத்தினாலோ அல்லது "எப்படியம்மா என்னைக் குழந்தையாக இருக்கும் போதே, பெட்டியில் அடைத்து, ஆற்றில் விட மனம் உனக்கு வந்தது?" எனக் கர்ணன் கேட்டால் அதற்குப் பதில் என்ன கூறுவது என்பது தெரியாத காரணத்தினாலோ, மனம் மயங்கி கர்ணனை நாடிச் செல்லத் துணிவில்லாமல் தன் அரண்மனையிலேயே அடைபட்டுக் கிடந்தாள்.

"ஐந்து தலை நாகம் போல் ஒருவர் மடிந்தாலும், ஐவரும் மடிந்து போகக் கூடிய பாண்டவர்கள் உயிர் வாழ்வது பெரிதா? என்றோ மகனில்லை எனக் கைவிடப்பட்ட கர்ணன் ஒருவன் உயிர் வாழ்வது பெரிதா என்பதை நீயே முடிவு செய்துகொள்" என்று கண்ணன் குந்தியிடம் கூறிச் சென்ற அந்த மொழிகளே திரும்பத் திரும்ப காதினிலே ஒலித்து, இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஒரு தாய்ப் பசு போலவே ஒரு தீர்மானத்திற்கும் வர முடியாதவளாகத் தவித்துக் கொண்டிருந்தாள் குந்தி.

பரசுராமரைக் குருவாகக் கொண்டு, அரிய வில் வித்தைகளை எல்லாம் கற்ற மாபெரும் வில்வீரனே கர்ணன். ஆனால் அவன் கற்ற வித்தைகள் எல்லாம் காலத்தில் பயன்படாமல் போக பரசுராமரே சாபம் கொடுத்து விடுவதையும், கர்ணனுடைய வரலாற்றிலே காணுகின்றோம். சத்திரிய குலத்தினரைக் கொன்று 27 தலைமுறைகளைக் கருவறுப்பதாக உறுதி பூண்டிருந்தவர் பரசுராமர். அப்படிப்பட்ட அவர் சத்திரிய குலத்தினருக்கு வில்வித்தைகளைக் கற்றுத்தர மாட்டார் என்பதைத் தெரிந்து கொண்டிருந்த கர்ணன், தன்னுடைய சத்திரிய குலத்தை மறைத்துவிட்டுப் பொய் கூறி பரசுராமரிடம் வில்வித்தைகளைக் கற்றுக் கொண்டு இருந்தான்.

கர்ணனின் சூழ்ச்சியைப் பரசுராமருக்கு உணர்த்த வேண்டும் என்று விரும்பிய கண்ணபெருமான் வண்டு வடிவம் தாங்கிச் சென்று கர்ணனின் தொடைகளைத் துளைத்து ஒரு புறத்திலிருந்து, மறுபக்கமாக வெளி வரலானார். இரத்தமோ வெள்ளமெனப் பீறிடவும், கர்ணன் தன் தொடை மீது தலைவைத்துத் தூங்கிக் கொண்டிருந்த குருநாதரின் தூக்கம் கலைந்துவிடக் கூடாது என்று கருதித் தன் உடல் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் இருந்தான்.

ஆனால் கர்ணனின் தொடையிலிருந்து பீறிட்ட இரத்தம், குருநாதரின் கைகளில் பட்டு அவருடைய தூக்கத்தைக் கலைத்துவிட்டது. கண்விழித்த பரசுராமர், அருவியென கர்ணனின் தொடையிலிருந்து பீறிடும் இரத்தத்தைக் கண்டார்.

அந்த இரத்த வெள்ளத்திலும் சித்தம் கலங்காமல் இருப்பது ஒரு சத்திரியனால் மட்டுமே முடியக்கூடியது என்பதனால் பரசுராமர் கர்ணனைப் பார்த்து "மறைக்காமல் சொல் நீ க்ஷத்திரியன் தானே" என்றார்.

வில்வித்தைகளைக் கற்றுக் கொள்ள விழைந்த ஆவலினாலே உண்மையை மறைத்து விட்ட கர்ணனும் "ஆம்! நான் சத்திரியன்தான். பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என வேண்ட, பரசுராமரோ கர்ணனை மன்னிக்காமல் "உன்னுடைய வில்வித்தைகள் உன்னையும் ஏமாற்றுவதாக! காலத்தில் அவை பயன்படாமல் போகட்டும்" எனச் சாபம் கொடுத்து விடுவதையும், அந்தச் சாபத்திற்கும் காரணமாக வண்டுவடிவம் எடுத்து கர்ணனின் உடலைத் துளைத்த கண்ணனே காரணமாக இருப்பதையும் கர்ணனின் வரலாற்றிலே காணுகின்றோம்.

அவ்வாறு, கற்ற வித்தைகள் பயன்படாமல் போகக் கர்ணனைப் பரசுராமரின் சாபத்திற்கு ஆளாக்கியதும் கண்ணனே. அவன் கொண்டிருந்த கவச குண்டலங்களை யாசகமாய் இந்திரனை அனுப்பிக் கவர்ந்து கொண்ட கள்வனும் கண்ணனே.

இனி, கர்ணனிடம் எஞ்சியிக்கும் அர்ச்சுனனைக் கொல்ல வல்லதான ஒரே ஒரு ஆயுதமான நாகாத்திரமும் கர்ணனுக்குப் பயன்படாமல் போகட்டும் என்று எண்ணி, அதனை ஒருமுறை மட்டுமே அர்ச்சுனன் மேல் ஏவ வேண்டும் என்ற வரத்தைக் கோரிப் பெற்று வர குந்தியை கர்ணனிடம் அனுப்புவதும் கண்ணனே.

கண்ணனின் கட்டளையின்படி அந்த வரம் கேட்டுப் பெற்று வரவும், அத்துடன் தன் தலைமகனை மகன் என்ற உரிமையோடு ஒரே ஒருமுறையேனும் கண்டுவரவேண்டும் என்ற பாசத்தின் தூண்டுதலாலும்தான், குந்தி தன் பாதபங்கயம் சிவக்க நடந்துபோய் கர்ணனின் அரண்மனையை அடைகிறாள்.

"வந்து குந்தி நின் கோயில் எய்தினள்" என வாயிலோர் கர்ணமாமன்னனிடம் சென்று உரைக்கிறார்கள். முந்தும் அன்புடன் எதிர்கொண்டு வந்து தாயை வரவேற்கிறான் கர்ணன்.

பௌர்ணமி நிலவைக் கண்டு, கடல் எப்படி ஆரவாரித்துப் பொங்குமோ, அதைப் போல கர்ணனும் தாயைக் கண்டுப் பரவசப்படுகிறான். பாசமெனும் பேருணர்வு பொங்க என்ன பேசுவது என்று இருவருக்குமே தெரிய வில்லை., குந்தி தன்னையீன்ற தாய் என்பதைக் கண்ண பெருமான்

## விபூதி என்பதன் பொருள் விளக்கம்



வி - மேலான

பூதி - ஐசுவரியம்

மேலான ஐசுவரியம் என்பது வீடுபேற்றைக் குறிப்பதாகும். தரிக்கும் அடியார்களின் வினைகள் நீக்கி, வீடுபேற்றை வழங்குவதால் விபூதி என வழங்கப்படுகின்றது.

## பிரம்மாவின் சாபம் தீர்ந்ததா? இல்லையா?



சிவபெருமான் ஆதியந்தமில்லாத அருட்பெருஞ்ஜோதியாகத் தோன்றி அதன் அடிகாண வராகமாய் திருமாலும், முடிகாண அன்னமாய்ப் பிரம்மாவும் முயன்றனர். அடிகாண முயன்ற திருமால், இயலாமல் சிவபெருமானிடம் வந்து தம் தோல்வியை ஒத்துக் கொண்டார்.

முடிகாண முயன்ற பிரம்மா தன் தோல்வியை ஒத்துக்கொள்ளாமல் தாழம்பூவைச் சாட்சியாக வைத்துத் தான் சிவனார் முடியைக் கண்டதாகப் பொய் உரைத்தார்.

பொய் உரைத்த காரணத்தால் பிரம்மாவிற்குப் பூலோகத்தில் தனிச்சந்நிதி வழிபாடு இல்லாமல் போனது. பொய்சாட்சி கூறிய காரணத்தால் தாழம்பூ சிவனார் வழிபாட்டிற்கு உகந்த மலரல்ல என்ற சாபம் பெற்றது.

இவ்வாறு சாபம் பெற்ற பிரம்மா அவிநாசித்திருத்தலத்தில் தவம் செய்து சிவனார் தமக்களித்த சாபத்தைப் போக்கித் கொண்டதாக கொங்கு நாட்டுச் சிவத்தலமான அவிநாசித் திருத்தலப்புராணம் கூறுகின்றது.

கூற முன்னமே கேட்டிருந்த கர்ணனுக்கு, வயோதிக அந்தணன் பின் இந்திரன் ஆனதைப் போல குந்தி தன் தாய் என்பதிலேயேும் கண்ணனுடைய சூழ்ச்சி ஏதேனும் இருக்குமோ என்ற ஐயம் தோன்றுகிறது. கண்ணன் தன்னுடைய உடமையான பொருளை யார் கேட்டாலும் கொடுக்கச் சித்தமாய் இருக்கிறான். அவனுக்கு அந்தணனும் சமமே. இந்திரனும் சமமே, உயிரைக் கேட்டாலும் தடையின்றி அவன் கொடுத்து விடுவான். ஆனால் அன்பைக் கொடுப்பதற்கு அதிலும் தன்னுடைய தாய்ப்பாசத்தைக் காட்டுவதற்குத் தன்னை ஈன்ற தாயே உண்மையில் வரவேண்டும் என்று விரும்புகின்றான். ஆனால் கர்ணனுக்குத் தற்போது உண்டாகும் சந்தேகம் என்னவென்றால் கண்ணனால் அனுப்பப்பட்டுள்ள குந்தி உண்மையில் தன்னை ஈன்ற தாயா அல்லது நடிக்க வந்தவளா?

இந்த ஐயம் கர்ணனுக்கு வந்ததற்குக் காரணம் இருக்கிறது. இதற்கு முன்னும், கர்ணனை மகனாகச் சொந்தம் கொண்டாடிப் பல தாய்மார்கள் வந்திருக்கிறார்கள். கர்ணனும், அவர்களைத் தாய் எனவே நம்பி அன்பு பாராட்டிப்பின் ஏமாந்து போயிருக்கிறான். அதற்குப் பின்னாலே கர்ணனும் தன்னுடைய உண்மைத் தாயைக் கண்டுபிடிக்க தேவர்களின் உதவியை நாடி இருக்கிறான்.

தேவர்களும், ஒரு புதுவிதமாக அமைந்த சக்தி வாய்ந்த புடவையை கர்ணனிடம் கொடுத்து "இந்தப் புடவையைக் கட்டி உயிருடன் இருப்பவர் யாரோ அவரே உண்மையில் தாய், மற்றவர்கள் போலிகள்! அவர்களை இப்புடவை எரியூட்டிக் கொன்று விடும்" என அறிவுறுத்தியிருக்கிறார்கள். கர்ணனை மகன் எனச் சொந்தம் கொண்டாடிய பல போலித் தாய்மார்களும் தேவர்கள் கொடுத்த புடவையின் மகிமையைத் தெரிந்து கொள்ளாமல், அதை உடுத்தப்போய், கருகிச் சாம்பலும் ஆகியிருக்கிறார்கள்.

பொருள் வேண்டும் எனக் கேட்டிருந்தால் கர்ணன் வாரி வழங்கி, வளமான வாழ்க்கையை அளித்திருப்பான். ஆனால் கர்ணனின் தாய் என்ற பெருமையுடன் நாடு முழுவதும் தமக்கே ஆக வேண்டுமெனப் போலி அன்பு பாராட்ட வந்த போலித் தாய்மார்கள் பலர் தங்கள் பொல்லாத பேராசையினால், உடல் கருகி, மாண்டு போயிருக்கிறார்கள். அப்படி மாண்டு போன தாய்மார்களின் விவரம் தெரியாமல் தன்னைச் சொந்தம் கொண்டாட வந்திருக்கும் குந்தியும் ஒரு போலித் தாய்தானா? போர் ஏற்பட்டு விட்ட நேரத்தில், கண்ணனின் சூழ்ச்சியால் மகனென்று பாசம் காட்டி மோசம் செய்ய குந்தி வந்திருப்பாளோ என்ற பல சந்தேகங்கள் கர்ணனை அலைக்கழிக்கின்றன. இருந்தாலும், தன் மனைக்கு வந்த குந்தியை போலித் தாயாகக் கருத மனம் முழுவதும் இடம் கொடுக்காத காரணத்தாலும், குந்தியைத் தக்க மரியாதை கொடுத்து ஆசனத்தில் அமர்த்திய கர்ணன் "**அன்னை வந்ததென் அருந்தவப்பயன். என்னை வந்தவாறு**" என வினவுகிறான்.

"தாயே! தாங்கள் வந்தது நான் செய்த தவப்பயனேயாகும்! தாங்கள் வந்த காரணத்தைக் கூறுங்கள்" என கர்ணன் வினவ, குந்தியும் "மகனே கர்ணா! நானே உன்னைப் பெற்ற தாய்" என்று கூறி, துர்வாச முனிவர் மந்திரங்களை உபதேசித்ததையும், அந்த மந்திரங்களில் சூரிய மந்திரத்தினால் கர்ணன் தோன்றியதையும், பழிக்கஞ்சி கர்ணனைப் பெட்டியில் வைத்து, ஆற்றில் விட்டதுமான வரலாற்றையெல்லாம் விவரமாக கர்ணனுக்கு எடுத்துரைக்கின்றாள்.

கண்ணனும் இதே விவரத்தைத் தான் காலையில் கர்ணனிடம் எடுத்துக் கூறியிருந்தார். இது உண்மை வரலாறுதானா? அல்லது கண்ணன் கூறச் சொல்லி குந்தியும் வந்து கூறும் கற்பனை வரலாறா? என்று விளங்காதவனாகிய கர்ணன், தேவர்கள் உண்மைத் தாயைத் தேரத் தனக்குக் கொடுத்துள்ள புடவையின் துணை கொண்டே குந்தியையும், சோதித்துப் பார்த்து விடுவோம் என்பதாகத் துணிந்து, குந்தியிடம் அப்புடவை பற்றிய விவரத்தைக் கூறுகின்றான்.

தொடரும்...

## மயிலம் என்ற பெயர் வரக் காரணம்



சூரபதுமன் மயில் போன்ற வடிவம் கொண்டு தவம் செய்து முருகப்பெருமானின் மயில்வாகனம் ஆகும் வரம் பெற்றான். அத்தகைய மகிமை நிறைந்த இடமே **மயிலம்** என வழங்கப்பட்டு வருகின்றது. கயிலை மலையில் வாழ்ந்திருந்த சங்குகன்னர் இத்திருத்தலத்தில் தவமேற்கொண்டு பாலசித்தர் எனும் நாமம் பெற்றார். இவரால் அமைக்கப்பெற்றதே ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் திருமடம் மற்றும் மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகும்.



# குழந்தைவரம் நல்கும் தங்கத் தொட்டில் பிரார்த்தனை

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், திருக்கருகாவூர், அருள்மிகு முல்லை வனநாத சுவாமி திருக்கோயில் மிகச் சிறந்த பிரார்த்தனை தலமாகும்.

இங்கு இறைவன் புற்றுமண்ணால் ஆன சுயம்பு உருவாவார். முல்லைவனத்தில் தானே உருவானபடியால் முல்லைவனநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

லிங்கத் திருமேனியில் முல்லைக்கொடி படர்ந்திருந்தமைக்கான வடுவை இன்றும் காணலாம்.

அருள்மிகு முல்லைவனநாதருக்குப் புனுகுசாத்தி வழிபடுவது மிகச் சிறப்பானது. இறைவனுக்குப் புனுகு சாத்தி வழிபடுவதால் அனைத்துத் தீராத நோய்களும் நீங்குகின்றன.

புனுகு சாத்த கட்டணம் ரூ.100ஆகும்.

கர்ப்பம் அடைந்த பெண்கள் சுகப்பிரசவம் அடைவதற்காக, அருள்மிகு கர்ப்பரட்சகாம்பிகையின் திருப்பாதத்தில் வைத்து மந்தரித்துக் கொடுக்கப்படும் விளக்கெண்ணை பிரசாதத்தை பிரசவ வலி ஏற்படும் சமயத்தில் சிறிதளவு வயிற்றில் தடவிக் கொள்ளச் சுகப்பிரசவம் உண்டாகும்.



நேரில் வர இயலாத வெளியூர் அன்பர்கள். ரூ.175- பணவிடை அல்லது வரைவோலை மூலம் அனுப்பிவைத்து விளக்கெண்ணை பிரசாதத்தை பார்சல் மூலம் பெற்றுப் பயன் அடையலாம்.

இத்திருத்தலத்தில் தங்கத் தொட்டில் பிரார்த்தனை மிகுந்த விசேடமாகும். குழந்தைப் பாக்கியம் வேண்டுவோர், அம்பாள் சன்னதியில் கொடுக்கப்படும் ஸ்கந்தர் உருவத்தினை பெண்கள் தங்கள் முந்தானையில் பெற்றுத் தங்கத் தொட்டிலில் இட்டு அம்பாள் சன்னதியினை வலம்வந்து அம்பாள் சன்னதியில் கொடுத்துப் பிரார்த்தனை செய்து கொள்ள விரைவில் குழந்தைபாக்கியம் உண்டாகும்.

குழந்தை பாக்கியம் பெற்றவர்கள் தங்கள் குழந்தையினைத் தங்கத் தொட்டிலில் இட்டு அம்பாள் சன்னதியை வலம்வந்து பிரார்த்தனையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

அறநிலையத்துறை ஆணையாளர் அவர்கள் ஆணைப்படி தங்கத் தொட்டில் பிரார்த்தனை செய்யும் தம்பதிகளுக்கு, அம்பாள் பாதத்தில் வைத்து எடுக்கப்பட்ட பரிவட்டம் ஆண்களுக்கும், ஜரிகை போட்ட ஜாக்கெட்பிட் பெண்களுக்கும் மேலும் தேங்காய் பழம் பிரசாதமும் சன்னதியில் வழங்கப்பட்டு வருகின்றது.

தங்கத் தொட்டில் பிரார்த்தனைக்கு கட்டணம் ரூ.550/-மட்டும்.

மேலும் விவரம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய பின்வருமாறு :

செயல் அலுவலர்
அருள்மிகு முல்லைவனநாத சுவாமித் திருக்கோயில்,
திருக்கருகாவூர் 614302
பாபநாசம் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்
தொலைபேசி : 04374-273423

**கருணைமழை பொழியும் கற்பகம், கருகாவூரில் வாழும் அற்புதம்.**

ஸ்ரீராம ஜெயம்

அண்ணாமலையெம் அண்ணா போற்றி!
தென்னார் அமுதக் கடலே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

**அருணை மாநகரில் சிறந்தமுறையில் இனிப்பு மற்றும் காரவகைகள் எப்போதும் தரமாகத் தயாரித்து அளிக்கும் ஒரே நிறுவனம்**

# திருநெல்வேலி அல்வா ஸ்டால்



19, தேரடி வீதி
திருஅண்ணாமலை

தொலைபேசி : 04175 - 224028

*அண்ணாமலையெம் அண்ணா போற்றி!*
*தென்னார் அமுதக் கடலே போற்றி!*

தரமான உணவுகளுக்கும், தங்கும் விடுதிகளுக்கும்

அருணை மாநகரிலேயே உன்னதமான ஓட்டல்

# உடுப்பி பிருந்தாவன்

கார் நிறுத்துமிடம், மினி ஹாலும் உள்ளது



தொலைபேசி எண் : 04175-222693
57-ஏ, தேரடி தெரு, திருஅண்ணாமலை

சுந்தரபாண்டியர் அளவற்ற காலம் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தார். பின்னர் தம் நெற்றிக் கண்ணில் தோன்றிய முருகப் பெருமானைத் தடாதகைப் பிராட்டியாரின் வயிற்றில் கருவாகும்படி திருவுள்ளம் கொண்டார். அம்மையார் கருப்பவதியானார்.

அக்கரு திங்கள் தோறும் நன்முறையில் வளர்ந்து வரலாயிற்று. திருவாதிரை நாளில் திங்கட்கிழமை வியாழன் வந்து கேந்திரத்தில் ஒளியுடன் ஏறி விளங்கப்பெற்ற நல்ல முகூர்த்தத்தில் ஒரு திருக்குமரன் அவதரித்தருளினார். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

திருமால், பிரம்மன் போன்ற தேவர்களும், புண்ணிய முனிவர்களும் தங்கள் தங்கள் மனைவியரோடு சுந்தரபாண்டியரின் திருமாளிகையை அடைந்து புதல்வனை வாழ்த்திச் சென்றனர்.

அணிவித்தனர்.

தேவகுருவாகிய வியாழபகவான் வேதம் முதலிய கலைகளையும், விற்கலையையும், வாட்பயிற்சியையும், யானை ஏற்றத்தையும் கற்பித்தார். பாசுபதப் படைப்பயிற்சியை மட்டும் சிவபெருமானிடம் கற்றுத் தெரிந்தார். அப்பருவத்தில் அவர் முப்பத்திரண்டு இலட்சணங்களும் பொருந்தியவராக இருந்தார். சிறந்த நற்குணம் உடையவராகவும் திகழ்ந்தார்.

இவருடைய படைப்பயிற்சியையும் குணங்களையும் கண்டு மகிழ்ந்த சுந்தரபாண்டியர், "இவன் பூமண்டலம் முழுவதும் அரசியற்ற வல்லவன்" என்று எண்ணினார். "இவனுக்குத் திருமுடி சூட்டிய பின்னர் திருமணம் செய்ய வேண்டும்" என்று கருத்தில் கொண்டு சுமதி முதலிய மந்திரிகளைக் கொண்டு ஆராய்ந்து அறிந்தார்.

# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி



மதுரை மாநகரத்து மக்கள் அனைவரும் வீடுகள், தெருக்கள் போன்றவற்றை அலங்காரம் செய்தனர். விழாக்கள் கொண்டாடினர்.

சுந்தரபாண்டியர் தன் திருக்குமாரருக்குச் சாதகன்மம் முதலியவற்றை அரசருக்குரிய வேத முறைப்படி நடத்தினார். அக்குழந்தைக்கு உக்கிர வருமன் என்ற பெயரிட்டனர். நான்காம் மாதத்தில் கோவிலுக்குக் கொண்டு சென்றனர். ஆறாம் மாதத்தில் அன்னம் ஊட்டினர். பதின்மூன்றாம் மாதத்தில் மயிர்வினை முடித்தனர். ஐந்தாம் ஆண்டிலே வேத முறைப்படி பூணூலை

சுந்தரபாண்டியர் தன் திருக்குமாரருக்குப் பெண் தேடத் தொடங்கினார். வடநாட்டில் உள்ள மணவூர் என்ற நாட்டின் அரசனும், சூரியகுலத் தோன்றலுமான சோமசேகரன் என்பவனின் மகளான காந்திமதி என்னும் கன்னியைத் திருமணம் பேசக் கருதினர். அன்று இரவு சோமசுந்தரக் கடவுள் சோமசேகரனின் கனவில் தோன்றி "அரசனே! நீ பெற்ற காந்திமதியை மதுரை நகருக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சுந்தரபாண்டியருடைய திருக்குமாரனுக்குத் திருமணம் செய்து கொடுப்பாயாக" என்று



## நெறிதவறக்கூடாது

**காந்த உசியானது எப்பொழுதும் வடக்குத் திசை நோக்கியே நிற்கின்றது. அதனால் தான் கடலில் செல்லும் கப்பல் திசை மாறிச் செல்வது இல்லை. அது போலவே, பக்தனுடைய உள்ளம் கடவுளையே நோக்கியதாகவே இருக்க வேண்டும். அப்படிப்பட்டவன் 'ஆசை' என்னும் பெருங்கடலில் வழி தவறிக் கெடமாட்டான்.**

கூறியருளினார்.

அம்மொழிகளைக் கேட்ட சோமசேகரன் விழித்து எழுந்தான். பெரிதும் மகிழ்ந்தான். சிவபெருமானைத் தொழுதான். வைகறைப் பொழுதிலே நித்திய கருமங்களை முடித்தான். அமைச்சர்களோடு கலந்தாலோசித்தான். தன் மகளைத் தேரில் ஏற்றிக் கொண்டு அமைச்சர்களோடும் மற்ற பரிவாரங்களோடும் மதுரையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

முன்னை நாளில் மணவினை பேசுவதற்கு நினைத்தபடியே அமைச்சர்கள் மதுரையிலிருந்து புறப்பட்டு மணவூரை நோக்கிச் செல்லத் தொடங்கினர். வழியில் எதிர்பட்ட சோமசேகர மன்னனைக் கண்டு "முருகக் கடவுளைப் போன்ற உக்கிரகுமாரனுக்கு உம்முடைய புதல்வியைத் திருமணம் செய்து தருவாயாக" என்றார்கள். சோமசேகரப் பாண்டியன் உடன்பட்டான். அதைக் கேட்ட அமைச்சர்கள் தூதர்களை அனுப்பிச் சுந்தரபாண்டியருக்கு அச்செய்தியைத் தெரிவித்தனர்.

பின்னர் அமைச்சர்கள் சோமசேகர மன்னனை அழைத்துக்கொண்டு மதுரையை அடைந்தார்கள். சோமசேகரனைச் சுந்தரபாண்டியர் எதிர்கொண்டு தழுவி, முகமன் கூறி அழகிய அரண்மனை ஒன்றில் தங்கவைத்தார். பின்னர் அமைச்சர்கள் அனைவரும் திருமண நாளை நிச்சயித்தனர். மற்ற அரசர்கட்குத் திருமண ஓலை அனுப்பினர். மதுரை நகர மக்களுக்கு முரசு மூலம் அறிவித்தனர்.

செய்தியை அறிந்த நகரமக்கள் பெருமகிழ்வு கொண்டனர். வீடுகளையும், வீதிகளையும் அலங்காரம் செய்தனர். ஓலை கிடைக்கப் பெற்ற மன்னர்கள் தம் பரிவாரங்களோடும் சுற்றத்தாரோடும் மதுரைக்கு வந்தனர். முனிவர்களும் தவசிகளும் வந்து குழுமினர். அனைவரும் சுந்தரபாண்டியரையும் தடாதகைப் பிராட்டியாரையும் வணங்கி ஆசி பெற்றனர்.

சுந்தரபாண்டியர் சோமசேகர பாண்டியனின் மகளாகிய காந்திமதியின் அழகு கண்டு மகிழ்வடைந்தார். வியாழபகவான் உறுப்பியல் நூலின் வழியே ஆராய்ந்து அனைவருக்கும் காந்திமதியின் அவயவ இலட்சணங்களைத் தெரிவித்தார். அத்துடன் அப்பெண்ணிற்கு ஒப்பாக மண்ணுலகிலும் விண்ணுலகிலும் ஒருவரும் இல்லை என்று கூறினார்.

பின்பு உக்கிரகுமாரர் அங்கிருந்து எழுந்து, அட்டமங்கல வரிசை சிறக்க, யானையின் மேல் கொண்டு வரப்பட்ட வையை ஆற்றின் நீரில் நீராடினார். திருமணக் கோலம் பூண்டார். திருமண மண்டபத்தில் ஏறி அமர்ந்தார். சங்கங்கள் ஒலித்தன. அப்போது காந்திமதியினை நீராட்டி அரிய ஆபரணங்களைப் பூட்டி மணமகனின் வலது புறத்தில் அமரச் செய்தனர்.

சோமசேகரன் தன் மனைவியுடன் எழுந்து வந்து காந்திமதியின் கையினை உக்கிரகுமாரர் கையில் வைத்து "சூரிய குலத்தைச் சேர்ந்த நான், சந்திர குலத்தைச் சேர்ந்த சுந்தரபாண்டியரின் திருக்குமாரரான உக்கிரகுமாரருக்கு என்னுடைய புதல்வியாகிய காந்திமதியை இப்பொழுது மனமுவந்து கொடுத்தேன்" என்று தாரை வார்த்துக் கொடுத்தான். பலவித வரிசைகளை வழங்கினார்.

இசைக்கருவிகள் முழங்கின. தேவர்கள் கற்பக மலரைப் பொழிந்தனர். அந்தணர்கள் தீ வளர்த்தனர். இன்னிசை முழங்க உக்கிரகுமாரர், காந்திமதிக்கு மங்கல நாண்பூட்டி வளையல் அணிந்த சிவந்த கையினைப் பற்றினார். மணவினை அனைத்தும் வேதமுறைப்படி சிறப்புற நடந்தேறியது. மதுரைத் திருநகர் வீதியினை மணமக்கள் வலம் வந்தனர். திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் அறுசுவை உணவு உண்டு



விடை பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் சுந்தரபாண்டியர் தன் மகன் உக்கிரகுமாரரை அழைத்து "மைந்தனே! இந்திரனும் கடலரசனும் உனக்குப் பெரும் பகைவராவார். இந்திரனுடைய முடிசிதறும் வண்ணம் இந்த வளையினைக் கொண்டு எறிவாயாக! கடல் சுவறும் வண்ணம் இந்த வேலை விடுக. மேருவின் செருக்கழிய இந்தச் செண்டினால் அடிப்பாயாக" என்று கூறி அந்த மூன்று படைகளையும் எடுத்துக் கொடுத்தருளினார்.

உக்கிரகுமாரர் சிறப்புடன் ஆட்சி புரிந்து வந்தார். பின்னர் அசுவமேதயாகம் தொண்ணூற்றாறு செய்து முடித்தார். இதனால் இந்திரன் உக்கிரகுமாரன் மேல் பொறாமை கொண்டான். "பாண்டிய நாட்டின் மழைவளம் குறைந்தால் நாட்டின் வளம் குறைந்து யாகங்களைச் செய்ய முடியாது" என்று எண்ணினான். எனவே கடல் வேந்தனாகிய வருணனை அழைத்து, "நீ சினத்துடன் சென்று மதுரையை வளைத்து அழிப்பாயாக" என்று கூறினான்.

உடனே வருணன் நள்ளிரவில் மதுரையை விரைந்து சூழ்ந்து அழிக்கக் கருதினான். கடலானது பொங்கி எழுந்து கரியமலைத் தோற்றத்துடன் மதுரைப் பதியைச் சென்று வளைத்தது. கடல் மதுரையின் கிழக்குத் திக்கில் வந்து நெருங்கும் நள்ளிரவு. அப்போது உக்கிரபாண்டியன் உறங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அவன் கனவில் வெள்ளியம்பலவாணராகிய சோமசுந்தரக் கடவுள், சித்தமூர்த்தியாய்த் தோன்றி, "பாண்டியனே! உன் நகரை அழிக்கும் பொருட்டுக் கடல் பெருகி வருகின்றது. நீ உடனே விரைந்து சென்று வேற்படையை எறிந்து வெற்றி பெறுவாயாக" என்று கூறியருளினார். திடுக்கிட்டு எழுந்த உக்கிரகுமாரபாண்டியன் அமைச்சர்களோடு விரைந்து சென்று பேரொலியோடு வருகின்ற கடலினைக் கண்டு வியப்படைந்து நின்றான்.

அப்போது கனவில் தோன்றியருளிய சித்தமூர்த்தி நனவிலும் எழுந்தருளி வந்து, "அப்பனே! நீ காலம் தாழ்த்தாதே! உடனே கூரிய வேற்படையை எறிந்து உலகிற்கு வரும் அழிவை நீக்குவாயாக" என்று கூறியருளினார். உடனே உக்கிரபாண்டியன் வேற்படையை எடுத்து வலமாகச் சுழற்றிக் கடலின் மேல் எறிந்தான். அவ்வேலின் நுனி கடலைத் தொட்டவுடன் கடல் "சுஃர்" என்னும் ஒலியுண்டாக நீர் வற்றி மிக்க வலி இழந்தது. உக்கிர வழுதியின் கணைக்கால் அளவில் குறைந்து நின்றது.

அப்போது உக்கிரவழுதியின் அருகில் நின்ற சித்தமூர்த்தி மறைந்தருளினார். அவர் சிவபெருமானாக ஆகாயத்தில் உமாதேவியோடும் வெளிப்பட்டுத் தோன்றினார். உக்கிரகுமாரப்பாண்டியன் அவரைத் துதித்து எழுந்தான். உடனே இறைவர் தமது திருக்கோயிலுள் புகுந்தருளினார். உக்கிரகுமாரபாண்டியனும் திருக்கோயில் அடைந்து அவரை வழிபட்டு விடைபெற்றுத் திரும்பினான். பல விளைநிலங்களை இறைவர் திருக்கோயிலுக்கு உக்கிரகுமாரபாண்டியன் சொந்தமாக்கி இனிது ஆட்சி புரிந்து வந்தான்.

தொடரும்...

நன்றி : இராமலிங்கர் பணிமன்றம், சென்னை.



### சிவாலய ஓட்டம் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் **திருமலை, திக்குறிச்சி, திருப்பரப்பி, திருநந்திக்கரை, பொன்மலை, பன்னிப்பாகம், கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம்** என்னும் பன்னிரு சிவாலயங்கள் உள்ளன. சிவராத்திரியன்று இங்குள்ள பக்தர்கள் சிவப்பு உடையணிந்து கையிலே விசிறி ஏந்தி "கோவிந்தா கோபாலா" என்னும் திருமாலின் திருநாமத்தைக் கூறி பன்னிரண்டு சிவாலயங்களை நோக்கி ஓடுகின்றனர்.

சிவபக்தர்கள் விஷ்ணுநாமம் கூறியவாறு சென்று சிவாலயங்களை ஓட்டமாய் ஓடித் தரிசிக்கும் இவ்வரிய நிகழ்ச்சி வேறு எங்கும் காண இயலாத ஒன்றாகும்.



### அஷ்ட திக்கு பாலகர்கள்

| | |
|---|---|
| கிழக்கு - இந்திரன் | தென்மேற்கு - நிருதி |
| தென்கிழக்கு - அக்னி | மேற்கு - வருணன் |
| தெற்கு - எமன் | வடமேற்கு - வாயு |
| | வடக்கு - குபேரன் |
| | வடகிழக்கு - ஈசானன் |



# தமிழிசை வளர்த்த சீர்காழி மூவர்





**பு.ஏ.இராமையா,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்
தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை

**அருணாசலக் கவிராயர்**

தில்லையாடி என்னும் சீரும் சிறப்பும் மிக்க சிற்றூரில் கி.பி. 1711 ஆம் ஆண்டில் பிறந்தவர் அருணாசலக் கவிராயர். இளமையிலேயே பெற்றோரை இழந்த கவிராயர் தமையனார் பாதுகாவலில் வளர்ந்து வந்தார். அப்போது சில ஆண்டுகள் ஆரம்பக் கல்வி கற்றார். பின்னர் தருமபுரம் சென்று பனிரெண்டு ஆண்டுகள் அங்கேயே தங்கி அம்பலவாணக் கவிராயரிடம் கல்வி கற்றார். இலக்கிய, இலக்கண, சமய நூல்களில் தெளிவான புலமை பெற்ற பிறகு தம் ஊர் திரும்பினார்.



முப்பதாவது வயதில் திருமணம் நடந்தேறியது. காசுக் கடை வைத்து பொருள் ஈட்ட முயன்ற கவிராயருக்கு அத்தொழிலில் தொடர்ந்து நாட்டம் செல்லவில்லை. இன்னிசையோடு இலக்கிய சமயச் சொற்பொழிவு ஆற்றுவதில் ஆர்வம் கொண்டு அதனையே ஆற்றிவரலாயினார்.

சொற்பொழிவாற்றி வந்ததோடு அசோமுகி நாடகம், சீர்காழித் தல புராணம், சீர்காழிக் கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இராம காதையை கீர்த்தனை வடிவில் நாடக நூலக்கி வெளியிட்டு பெருமை பெற்றார்.

இந்த நூலில் 258 இசைப்பகுதிகளும், 197 தருக்களும், 60 கண்ணிகளும் அடங்கி உள்ளன. இறை வணக்கமாக தோடயம், நான்கடி கொண்ட விருத்தங்கள், கொச்சகம், வெண்பா, கலித்துறை போன்ற பாடல்களும் அந்த நூலில் காணப்படுகின்றன.

அவருடைய நாடக நூலில் அசாவேரி, மேற்செம்பாலை, நிருபதுங்கராகம்(விளரிப் பண்) அரும்பாலை, முல்லைப் பண் முதலிய நாற்பது இராகங்களைக் கையாண்டுள்ளார். துவிஜாவந்தி, மங்களகௌசிகம் போன்ற அபூர்வ இராகங்களையும் பயன்படுத்தி இருக்கிறார். பெரும்பாலும் ஆதி, சாய்ப்புத் தாளங்களையே கையாண்டுள்ளார்.

"ஏன் பள்ளி கொண்டீரையா? - ஸ்ரீரங்கநாதரே ஏன் பள்ளி கொண்டீரையா? என்ற கீர்த்தனை மோகன இராகத்தில் ஆதி தாளத்திலமைந்தது, இக்கீர்த்தனையில் இராம சரிதத்தையே முழுமையாகச் சொல்லி உள்ளது யாவராலும் பாராட்டப்பட்டுள்ளது. இக் கீர்த்தனை அரங்கேற்றப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை எல்லோராலும் பாடப்பட்டு வருகின்றது. ★

**ராமநாடகம் உண்டான வரலாறு**

*வேங்கடராமையர், கோதண்டராமையர் எனும் இருஇசை மேதைகள் அருணாசலக் கவிராயரிடம் கம்ப இராமாயணத்தைப் பாடம் கேட்டார்கள். இராமாயணத்தைக் கீர்த்தனைகளால் பாடினால் உலகம் போற்றும் என அவ்விருவரும்வேண்ட இராமநாடகக் கீர்த்தனைகளைப் பாடிப்புகழ் பெற்றார் அருணாசலக் கவிராயர்.*

இராம நாடகம் அரங்கேற்றுவதற்கு முன்பாக திருவரங்கத்திலுள்ள வைணவர்கள் அதை அரங்கேற்ற இசைவு தராததால் மனவருத்தமுற்று கவிராயர் இந்தப் பாடலைப் பாடியதாகவும் அதற்கு இரங்கி திருவரங்கநாதர் ஆணையிடக் கோயில் வைணவர்கள் அனுமதி அளித்ததாகவும் கூறப்படுகிறது.



பாலகாண்டத்தில் இராமனைக் கண்டு காதல் கொண்ட காட்சியை

**"ஆரோ இவர் யாரோ என்ன பேரோ அறியேனே"**

எனத் தொடங்கும் கீர்த்தனையை அமைத்து எல்லோருடைய பாராட்டையும் பெற்றுள்ளார். இன்றும் அந்தக் கீர்த்தனை எல்லா இசை மன்றங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு கீர்த்தனை அமைத்திருப்பது இவருடைய தனிச் சிறப்பாகும். அனுமன் சீதையைப் பார்த்துவிட்டு வருத்தத்தோடு அமர்ந்திருக்கின்ற இராமன் முன்பு வந்த போது **"கண்டேன் கண்டேன் சீதையை கண்டேன் இராகவா"** என்று தொடங்கும் கீர்த்தனையை அமைத்துள்ளார். அதுவே மேற்கூறியதற்குச் சான்றாக அமைவதைக் காணமுடிகிறது.

இந்த நூலில் யுத்தத்தைப் பற்றிய வர்ணனை மிகவும் சிறப்பாகக் காணப்படுகிறது. கவிராயர் யுத்தங்களை பெருங்காப்பியத் தன்மையோடு வர்ணிக்கிறார். இலக்குவனுக்கும் இந்திஜித்துக்கும் நடந்த இரண்டாம் முறை யுத்தத்தை **"பெரும் சண்டை பாரீர்"** எனத் தொடங்கி அதைப் பெரும் கீர்த்தனமாகவே பாடி இருக்கிறார்.

இந்தக் கீர்த்தனை எட்டுச் சரணங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றிலும் இருபத்தியிரண்டு அடிகள் காணப்படுகின்றன. இந்தக் கீர்த்தனையை நாதநாமக்கிரியை என்ற இராகத்தில் பாடியுள்ளார்.

இவர் கீர்த்தனைகளில் எதுகை, மோனை, இயைபுத் தொடைகள் அமைந்து கீர்த்தனைகளுக்குச் சுவையூட்டுகின்றன. **"அய்யனே உன் மகிமை அறிந்து சொல்ல வேணுமென்றால் ஆதி சேடனுக்கு வருமோ"** இந்தக் கீர்த்தனையின் இரண்டு அடிகளிலும் மோனைத் தொடை அமைந்திருப்பதைக் காணலாம்.

கன்னிமார், பொன்னின் ஒளியும், மன்னன் சனகன்மணி எனத் தொடங்கும் அனு பல்லவியின் அடிகளில் எதுகைத் தொடை அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

**"எப்படி மனந்துணிந்ததோ சாமி"** என்ற கீர்த்தனையின் அனுபல்லவியின் அடிகளில் **"எப்பிறப்பிலும் பிரியவிடேன் என்று கை தொட்டீரே! ஏழையான சீதையை நட்டாற்றிலே விட்டீரே!"** என்ற இயைபுத் தொடை அமைந்து இசை நயம் தருவதைக் காணலாம்.

இவருடைய கீர்த்தனைகளில் மூன்றிற்கு மேற்பட்ட சரணங்கள் அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும்.

கவிராயர் அவர்கள் இராமகாதையைச் சொற்சுவை, பொருட்சுவை, இசைநயங்கள், தொடை நயங்கள் குறையாமல் கீர்த்தனை வடிவில் நாடகமாக்கிப் பெருமை பெற்றுள்ளார். இத்தகைய சிறப்புக்குரியவர் கி.பி.1779ஆம் ஆண்டில் இறைவன் திருவடியை எய்தினார்.

தொடரும்...

## சோபனப்பாடல்

இராம நாடகக் கீர்த்தனையில் ஆசிரியர் தன் பெயர் வருமாறு ஒரு பாடலை இயற்றியுள்ளார். "அருணாசலக் கவிநாடகம், இது படிப்போர்க்கும் கேட்கும் எல்லோர்க்கும் சோபனம்" என் அப்பாடல் அமைகிறது.



# இராமரிடமே யுத்தம் புரிந்த ஆஞ்சநேயர்



"**ராம்**", "**ராம்**" என்று இராமபிரானின் நாமம் எங்கே உச்சரிக்கப்பட்டாலும், அங்கே ஆஞ்சநேயர் பிறர் கண்ணுக்குத் தென்படாமல் மறைந்து நின்று தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டு "அஞ்சலி அத்தனாய்" நிற்பார் என்பதால் இராமாயணக்கதை நடக்கும் இடங்களில் அவருக்காக ஒரு ஆசனம் போட்டு வைப்பதைக் காணலாம்.

இத்தகைய இராமபக்தரான ஆஞ்சநேயர் தம் இதய தெய்வமான இராமபிரானிடமமே யுத்தம் புரிந்துள்ள வரலாறு, ஒரு அதிசயக்கத்தக்க வரலாறு அல்லவா!

அதற்கும் கூட காரணம் ஆஞ்சநேயரின் இராம பக்தியே ஆகும்.

ஒருநாள் இராமநாம தியானத்தில் வீற்றிருக்கும் ஆஞ்சநேயரிடம் இராமநாமத்தைக் கூறியவாறே வந்து அபயம் கேட்கின்றான் சகுந்தன் என்ற மன்னன்.



ஜெய்ராம், ஸ்ரீராம், சீதாராம் என்று கூறியபடியே வந்து ஆஞ்சநேயரின் திருவடிகளில் விழும் சகுந்தன் என்ற மன்னன் "என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டுகின்றான்.

" இராம நாமத்தின் மேல் ஆணை, உன்னைக் காப்பாற்றுகின்றேன்" என்று உறுதி கூறுகின்றார் ஆஞ்சநேயர்.

"யார் உன்னைக் கொல்ல வருகிறார்கள்? ஏன் கொல்ல வருகிறார்கள்?" என்று விவரம் கேட்கிறார் ஆஞ்சநேயர்.

"சுவாமி! என் அவைக்கு வசிட்டர், விசுவாமித்திரர் மற்றும் பல முனிவர்களும் வந்தனர். நானும் அம்முனிவர்களை வணங்கும் போது முதலில் வசிட்டரை வணங்கி இரண்டாவதாக விசுவாமித்திரரை வணங்கினேன்.

இதனால் விசுவாமித்திரருக்குக் கோபம் வந்துவிட்டது. நீ என்னை அவமானப்படுத்தி விட்டாய். "நாளைய தினம் அஸ்தமனத்திற்குள் உன்னை என் காலடியில் விழும்படி செய்கிறேன் பார்" எனச் சபதம் கூறிச் சென்ற விசுவாமித்திரர் இராமபிரானிடம் கூற, இராம பிரானும் என்னுடன் போர் புரிய வந்து கொண்டு இருக்கிறார்.

"என்னை நீங்கள் இராமபிரானிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்" என்று சகுந்தன் முழுவரலாற்றையும் விவரித்த பிறகுதான் சரணாகதி அடைந்தசகுந்தனைக் காப்பாற்ற இராமபிரானிடமே தாம் யுத்தம் புரிய வேண்டி உள்ளதைத் தெரிந்து கொள்கின்றார் ஆஞ்சநேயர்.

இராமபிரானுடன் உண்டான யுத்தத்தில் இராமர் பாணங்களைச் செலுத்த ஆஞ்சநேயர் "ராம், ராம்" என இராமநாமத்தையே தியானித்து நின்றார். ஸ்ரீராமர் செலுத்திய அம்புகள் ஆஞ்சநேயரின் உடலில் உள்ள ரோமங்களைத் துளைத்து உள்ளே செல்ல முடியவில்லை.

அவர் தம் ரோமங்களும் இராமநாம மயமாக இருந்தன. யாவற்றையும் நேரில் கண்ட விசுவாமித்திரர் ஆஞ்சநேயரின் இராம பக்தியை உகந்து சகுந்தனை மன்னித்தார். இராம நாம தியானத்தால் இராமரையே வெற்றிக் கொண்ட ஆஞ்சநேயரின் பக்தியைக் கண்டு உலகமே வியப்புற்றது. ★

- முனைவர் **இரா. செல்வக்கணபதி**,
எம்.ஏ.பி.எச்.டி

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரரை

## 1. கோரக்கச் சித்தர்



தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த சித்தர்கள் பலராயினும் அவருள் சிலரைத் தொகுத்துப் பதினெண் சித்தர்கள் என்று குறிக்கும் வழக்கு நிலவி வருகிறது.

பதினெண் சித்தர்களுள் ஒருவர் கோரக்கச் சித்தர். கோரக்கர், கோரக்கநாதர் என்றும் இவர் அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது, தென்மாநிலங்களிலும் வடநாட்டிலும், சீனா முதலிய கிழக்கு நாடுகளிலும் இவர் வரலாறு அறியப்பட்டுள்ளது. கோரக்கர், மச்சேந்திரர் என்ற சித்தரின் மாணாக்கராக அறியப்படுகிறார்.

பிள்ளைப் பேறு வாய்க்காத பிராமணப் பெண் ஒருத்தருக்கு ஒருமுறை மச்சேந்திரர் விபூதிப் பொட்டலம் ஒன்றை வழங்கி, இதனைத் தண்ணீரில் கலந்து பருகினால் கருவாய்க்கும் என்று விடைபெறுகிறார். பிறர் சொற்கேட்டு நம்பிக்கை இழந்த அந்தப் பெண் விபூதியைக் குப்பை மேட்டில் வீசிவிடுகிறாள். பல ஆண்டுகள் கழித்து, அவ்வழியே வந்த மச்சேந்திரர் பிராமணப் பெண்ணைச் சந்தித்து, உன் மகனை அழை, நான் ஆசீர்வதிக்கிறேன் என்று கூற அவள் கண்ணீர் சிந்தி நடந்ததை விவரிக்கிறாள்.

அவள் காட்டிய குப்பை மேட்டை ஒரு குச்சியில் கிளறி "கோரக்கா வருக" என சித்தர் அழைக்கக் குப்பை மேட்டிலிருந்து கோரக்கர் வெளிப்பட்டு, மச்சேந்திரரைத் தொடர்ந்து பயணித்து அவர் சீடராகிறார். "கோரக்கர்" என்ற சொல்லுக்குக் குப்பையில் உதித்தவர் என்பது பொருள்.

ஆசிரியரின் விருப்பத்தை நிறைவேற்றத் தம் கண்களில் ஒன்றைப் பெயர்த்துக் கொடுத்து ஒரு பெண்மணியிடம் வடை ஒன்றைப் பெற்றவர் இவர். நெறி கடந்த தம் ஞானாசிரியரை நெறிப்படுத்த அவர் குழந்தையைக் கல்மீது மோதிச் சுக்கு நூறாக்கிப் பின் உயிர் பெறச் செய்தார். கல்மலை ஒன்றைச் சிறுநீர் பெய்து பொன்மலையாக்கினார். உமையம்மை ஒருபெண் வடிவில் காட்சியளித்து இவர் பசிப்பிணி தீர அன்னம் வழங்கினார். அல்லமதேவரோடு வாட்சண்டையிட்டுச் சிவன் அருள்பெற்றவர். கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவர். இவர் ஜீவசமாதி நாகப்பட்டினத்தை அடுத்த வடக்குப்பொய்கை நல்லூரில் அமைந்துள்ளது. ஐப்பசிப் பௌர்ணமி பெருவிழா நடைபெற்று வருகிறது. இவர் ஜீவசமாதி கூடிய காலம் கி.பி.1233 என்று அறியவருகிறது.

மருத்துவம், யோகம், ஞானம் பற்றிய நூல்கள் கோரக்கரால் அருளிச் செய்யப்பெற்றன. போகர் இவருக்கு நெருங்கியநண்பர். கஞ்சாவைத்தம் மருத்துவநெறிக்கு முதலாகக் கொண்டார். சீனநாடு சென்று 500 ஆண்டுகள் வாழ்ந்து பல சித்தாடல்களை நிகழ்த்தியவர். உமையை வாலைத் தெய்வமாகப் போற்றி நின்று அருள்பெற்றவர். சித்தமருத்துவநெறி, மறை பொருளாகவன்றி வெளிப்பட விரித்துரைக்கப்படவேண்டும் என்ற கருத்து கொண்டவர்.

கோரக்கர் இயற்றியனவாக 40 நூல்கள் அறியப்படுகின்றன. இவர் இயற்றிய ஏழுநூல்களை கி.பி.1975இல் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது. ஏழுநூல் தொகுதி என்பது அதன் பெயர். சிவயோகி, மா.இரத்தினசபாபதிபிள்ளை என்பார் ஏடு பெயர்த்து எழுதியுள்ளார். ந.சேதுரகுநாதன் குறிப்புரை வரைந்துள்ள இதனுள் 1. சந்திரரேகை 200, 2. நமநாசத்திறவுகோல் 3. இரவி மேகலை75, 4. முத்தாரம் 5, நாதபேதம் 25 ஆகிய ஐந்து நூல்களும்

போகர் இயற்றிய இரண்டு நூல்களும் இடம் பெற்றுள்ளன.

கோரக்க சித்தரின் நூல்களுள் தலையாயது சந்திரரேகை 200 என்பதாகும். 200 ஆசிரியவிருத்தங்களால் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. கதிரவன் ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரனைப் போல் சிவனருள் ஞானஒளிவீசுவதால் இந்நூல் சந்திரரேகை எனப் பெயர் சூட்டப் பெற்றதாகத் தெரிகிறது. உமையை இந்நூல், பார்வதி,தாய், சாமளரூபீ, வீரி, பாஸ்கரி, பஞ்சாட்சரதேவி, பரிபுரை, பங்கயவேணி, மாலி என்றெல்லாம் பலவாக குறித்துச் சொல்கிறது.

சந்திரரேகையில் விந்திறங்காமல் போகம் செய்யும் முறை (பாடல் 57,117,142) நரைதிரை நீங்க யோகாசனம் செய்தல் (66), உடல் தளர்ந்திடாமைக்கு வழி(69), வயது மிக வளர்ந்தோங்கவும், ஆயுள் நீட்டிக்கவும் வழிமுறைகள்(69,73), ஊழ்வினை நீங்க(79), பிறப்பற(67,81), காயகற்பவிளக்கம் (108), பேய்,பில்லி, சூனியம்,ஓட்ட(1!4-115), பிறர் கண்களுக்குப் புலப்படாமல் மறைதல் (116) என்றும் இளமையோடு வாழ(128), கரணயோகம்(130), சிவனைக் காணும் மந்திரம் (143), முதலிய வியப்பூட்டும் தகவல்கள் யாவும் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

சித்தர்களின் நூல்களில் மறைபொருளாக உரைக்கப்பட்டுள்ள பகுதிகளை எளிதில் உணர்ந்துகொள்ள கோரக்கர் அருளியதோர் நூல் நமநாசத்திறவுகோல். இந்நூலில் 23,24 ஆம்பாடல்களுள் கோரக்கர் உள்ளிட்ட 19 சித்தர்களின் கொள்கை முடிவுகள் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. ஏராளமான சித்தமருத்துவர்களின் செய்முறை இந்நூலினுள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் 49,50 ஆம் பாடல்களுள் எமனைவென்றுநீண்ட நல்வாழ்வு வாழ உதவும் மிருத்துவிஞ்சுக் குளிகை தயாரிக்கும் முறைமை விளக்கப்பட்டுள்ளது. கற்பகம் மற்றும் சுண்ணம் செய்யும் முறைமைகள் இரவிமேகலை 75 இல் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சித்தமருத்துவம் மறைபொருளாக நில்லாது குழப்பமின்றி விளங்கித் தோன்றவேண்டும் என்ற கருத்துடையவர் கோரக்கர் என்பது இவரது நூல்களால் அறியவருகிறது.





**பக்தர்களால் பழனி ஆண்டவருக்குச் செலுத்தப்படும் 20 வகைக் காவடிகள்**

1) தங்கக் காவடி
2) வெள்ளிக் காவடி
3) பால் காவடி
4) சந்தனக் காவடி
5) பன்னீர்க் காவடி
6) சர்க்கரைக் காவடி
7) தீர்த்தக் காவடி
8) எண்ணெய்க் காவடி
9) அன்னக் காவடி
10) இளநீர்க் காவடி
11) அலங்காரக் காவடி
12) அக்கினிக் காவடி
13) கற்பூரக் காவடி
14) சர்ப்பக் காவடி
15) மச்சக் காவடி
16) சேவல் காவடி
17) மணல் காவடி
18) புஷ்பக் காவடி
19) பறவைக் காவடி
20) தேர்க் காவடி

கோரக்கர் வழிபாடு இன்றும் நேபாள நாட்டில் அமைந்துள்ளது.

காட்மண்டுவில் கோரக்கருக்குத் தனி ஆலயம் உள்ளது. கோரக்கருக்கு நேபாள அரசு விழா எடுத்துக் கொண்டாடுகிறது. அந்நாட்டுக் காகித நாணயங்களிலும், உலோக நாணயங்களிலும் கோரக்கர் உருவம் பொறிக்கப்பெற்றுள்ளது. கூர்காஸ் என்ற இனத்தவர் தம்மைக் கோரக்கர் வழி வந்தவர் என்று கூறி கொள்கின்றனர். மராட்டிய மக்கள் கோரக்கரை வீரர் தலைவராகப் போற்றிவருகின்றனர். வடநாட்டில் இவர் பெயரில் கோரக்பூர் என்ற பெரு நகரம் ஒன்று அமைந்துள்ளது.

தமிழ்நாட்டுச் சித்தர் மரபில் தன்னிகரற்றுவிளங்கும் கோரக்கர் நூல்களை ஓதி உணர்ந்தால் சாகாக்கலை வசமாகும்.

(டாக்டர் இரா. செல்வக்கணபதி அவர்கள் எழுதிவெளியிட்டுள்ள கோரக்க சித்தர் அருள் வரலாறு என்ற நூலுள் இவர்தம் விரிவான வரலாற்று உண்மைகளைக் காணலாம்.) ★

# வினை தீர்க்கும் விருட்சங்கள்

**பா.பாஸ்கரன்**, பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையாளர், நிர்வாக அதிகாரி
அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்
திருக்கோயில், மதுரை



**விருட்சங்கள், அதாவது மரங்கள்...**

ஒரு மண் பசுமையாகவும் ஆரோக்யமாகவும் திகழ காரணமே மரங்கள் தான்.

மரங்கள் இல்லையேல் மழை இல்லை... மரங்கள் இல்லையேல் பறவைகள் என்றொரு இனமே இல்லாமல் போய்விடும்.

மரங்களே நமது மனைகளில் கதவுகளாய் ஜன்னல்களாய் அமைந்து நமக்குக் காவல்காரனாகவும் திகழ்கிறது. ஆலயத்தில் குடியிருக்கும் தெய்வம் ஆண்டுக்கு ஒரு நாள் தேர்த் திருவிழாவன்று ஊருக்கெல்லாம் வந்து செல்ல மரமே ஆதாரமாக உள்ளது.

குளிர் தரும் நிழலை நாம் உணரவும் மரம் தான் காரணம். மொத்தத்தில் பஞ்சபூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு இடத்தில் இருக்கிறது என்றால் அது மரம் தான்.

இந்த ஐந்தில் ஒன்று இல்லாவிட்டாலும் மரம் இல்லை. இப்படியும் சொல்லலாம். மரம் இல்லாவிட்டால் இந்த ஐந்தும் இந்த மண்ணில் இல்லாமல் போய்விடும்.



எப்படிப்பார்த்தாலும் மரங்களே மண்ணில் உயர்ந்த உயிர்ச்செல்வமாய் உள்ளது.

ஆறறிவு படைத்த மனிதன் கூட ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே மண்ணில் வாழ முடிந்தவன். ஆனால் ஐயாயிரம் ஆண்டு பழமையான மரங்கள் எல்லாம் இந்த மண்ணில் உண்டு. இந்த மரங்களிலும் பல இனங்கள் உண்டு. அவைகளுக்கு தனித்தனியே குணங்கள் இருப்பதை விருட்சசாஸ்திரம் கூறுகிறது.

மரங்கள் மனிதர்களுக்கு மிஞ்சிய சக்தி. ஒரு மனிதனின் தனிப்பட்ட பாவவினைகளுக்கும், துன்ப வினைகளுக்கும் பரிகாரம் தரமுடிந்த அருட் சக்தி நமது நட்சத்திரங்களுக்கும், மரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதையும் நட்சத்திரங்களின் பிரதிநிதிகளாய் பல மரங்கள் இந்த மண்ணில் திகழ்வதையும் விருட்சசாஸ்திரம் விளக்கிக் கூறுகிறது.

எவர் ஒருவர் மரம் நடுகிறாரோ அவர் ஒரு நல்வினையை நடுகிறார். எவர் ஒருவர் ஒரு மரத்திற்கு நீர் விடுகிறாரோ அவர் தன்னை காக்கப்போகும் சக்தி ஒன்றுக்கு நீர் விடுகிறார். ஒருவர் வைத்த மரம் மண்ணில் வேர்பிடித்து வளர வளர அதற்கேற்ப வாழ்வில் அவருக்கு இருக்கும், யாராலும் தீர்க்கப்பட முடியாத ஒரு துன்பம் மெல்ல நீங்கத் தொடங்குகிறது.

இந்த நுட்பமான உண்மையைப் பல சித்தர்களும், முனிவர்களும் அறிந்து கொண்டு தங்கள் நூல்களிலும் இது பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஒரு ஆலயத்தின் சிறப்புக்கே கூட அந்த ஆலயத்திற்கென்றே உள்ள ஸ்தல விருட்சம் தான் காரணமாகிறது. ஸ்தல விருட்சத்தின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்பவே அந்த ஆலயம் இருக்கும்.

நுட்பமான இந்த உண்மைகளை இனிவரும் காலத்தில் உள்ளவர்கள் அறியவும், மரத்தின் மாண்புகளை அனைவரும் அறியும்படிச் செய்யவும், அதே சமயம் மனிதக் கூட்டத்தை அவர்களின் தீவினைகளிலிருந்து விடுவித்து அவர்களை நல்வினைகளுக்குச் சொந்தமாக்கவும் **"நட்சத்திர மண்டல ராசி தோட்டம்"** ஒன்றை மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்குச் சொந்தமான மாபெரும் விளைநிலம் ஒன்றில் (சுமார் 126 ஏக்கர்) அமைக்கவும் மீனாட்சியம்மன் ஆலய நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மதுரை நகருக்கு மிக அருகாமையில் அமைய உள்ள இந்த தோட்டத்தில் அவரவர் நட்சத்திர ராசிக்குரிய மரங்கள் தேர்வு செய்யப்பட்டு உரிய நபரின் பெயரால் அதே சமயம் பாதுகாப்போடு திட்டமிட்டு வளர்க்கப்படும். இதற்கு ஒரு நபருக்கு 501 ரூபாய் என்று கட்டணம்

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் தோட்டப் பராமரிப்புக்கும் ஆலய வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும்.

ஒரு கல்லில் மூன்று மாங்காய் போல, ஆலயத் திருப்பணிக்கு நன்கொடை தந்தது போலவும் சமுதாயத் திருப்பணிக்கு மரம் தந்தது போலவும் தங்கள் தனிப்பட்ட வினைநலனுக்கு சாஸ்திரப்படி ஒரு விருட்சம் வளர்க்கவும் துணை செய்யும் இந்த அரிய திட்டத்தில் ஜாதி பேதமின்றி மத பேதமின்றி அனைவரும் பங்கு கொண்டு சிறப்பிக்க ஆலய நிர்வாகம் அனைவரையும் வரவேற்கிறது. மனிதனை விட மேலானது மரம். மண்ணிலே மிக மேலானது மரம். மரம் கண்ணுக்கு தெரியும் ஒரு இறைவடிவம். இதைத் தொழுவோம்... வினைநலன் பெறுவோம்.



## கடுவெளிச் சித்தர் தவம் புரிந்த திருத்தலம்

கடுவெளிச் சித்தர் தவம் புரிந்த திருத்தலம் **திருஇரும்பை மாகாளம்** எனும் அருள்மிகு **திருமாகோளேஸ்வரர் திருக்கோயில்** ஆகும்.

இத்திருத்தலம் திண்டிவனம் வட்டத்தில் உள்ளது.

ஒருமுறை கோயில் விழாவில் நடனமாடிய நடனமாதின் காற்சிலம்பு கழன்று விழ. நாட்டிய நிகழ்ச்சி தடைப்படக்கூடாதென்று நல்ல எண்ணத்தில் சித்தர் காற்சிலம்பை எடுத்து நடனமாதின் காலிற்பூட்டினார்.

அதைக் கண்ட மக்கள் சித்தரை ஏளனம் செய்து நகைத்தனர்

சித்தர்உடனே சினந்து,

**"வெல்லும் பொழுது விடுவோம் வெகுளியை...**

**கல்லும் பிளந்து கடுவெளியாமே"**

என்றுபாட, ஆலயத்தில் உள்ள மூலலிங்கம் வெடித்து எட்டுப் பகுதியாகச் சிதறியது.

அதனை அறிந்து அரசன் வந்து சித்தரிடம் மன்னிப்பை வேண்டினான்.

சித்தர் மீண்டும் ஒரு பாடல் பாடிய போது சிதறிய சிவலிங்கம்ஒன்று கூடியது.

அதனைச் செப்புத்தகடு வேய்ந்து ஒன்றாக்கி மன்னன் வழிபட்டான். அன்று முதல் அந்நிலையிலேயே சிவலிங்கம் இத்தலத்தில் விளங்கிவரக் காணலாம்.

## பிறந்த தின நட்சத்திரங்களுக்கு உகந்த தாவரங்கள் விவரம்

| நட்சத்திரம் | தாவரம் |
|---|---|
| அசுவினி | எட்டி |
| பரணி | பெருநெல்லி |
| கார்த்திகை | அத்தி |
| ரோகிணி | நாவல் |
| மிருகசீரிடம் | கருங்காலி |
| திருவாதிரை | திப்பிலி |
| புனர்பூசம் | மூங்கில் |
| பூசம் | அரசு |
| ஆயில்யம் | புன்னை |
| மகம் | ஆல் |
| பூரம் | பலாசு |
| உத்திரம் | அரளி |
| அஸ்தம் | காட்டுமா |
| சித்திரை | வில்வம் |
| சுவாதி | மருதம் |
| விசாகம் | விளா |
| அனுஷம் | மகிழம் |
| கேட்டை | பராய் |
| மூலம் | ஆச்சா |
| பூராடம் | வஞ்சிக்கொடி |
| உத்திராடம் | பலா |
| திருவோணம் | வெள்ளைஎருக்கு |
| அவிட்டம் | வன்னி |
| சதயம் | கடம்பு |
| பூரட்டாதி | மா |
| உத்திரட்டாதி | வேம்பு |
| ரேவதி | இலுப்பை |

## பிறந்த இராசிக்கு உகந்த மரங்கள்

| இராசி | மரங்கள் |
|---|---|
| மேஷம் | சந்தனவேங்கை |
| ரிஷபம் | எழிலைப்பாலை |
| மிதுனம் | பலா |
| கடகம் | பலாசு |
| சிம்மம் | பாதிரி |
| கன்னி | மா |
| துலாம் | மகிழம் |
| விருச்சிகம் | கருங்காலி |
| தனுசு | அரசு |
| மகரம் | அரசு |
| கும்பம் | வன்னி |
| மீனம் | ஆல் |

# சிற்பிக்கு அருள்புரிந்த சிங்கார வேலன்



தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் திருவாரூருக்குப் பதின் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது எண்கண் என்னும் திருத்தலம்.

எண்கண்ணில் வேலவனுக்குச் சிலை அமைத்த சிற்பியே சிக்கலிலும், எட்டுக்குடியிலும் வேலவனுக்குச் சிலை அமைத்தவன்.

எட்டுக்குடியில் முதன்முதலில் வேலவனுக்குச் சிலை அமைத்ததும், அச்சிற்பத்தின் எழிலைக் கண்ட மன்னன், அச்சிற்பி அதே போல் வேறெங்கும் அமைக்கக்கூடாது என்று சிற்பியின் கண்களைக் குருடாக்கிவிட்டான்.

இவ்வாறு குருடனான சிற்பி தன் மனக் கண்ணால் அமைத்ததே சிக்கல் முருகப்பெருமானின் சிலாரூபமாகும்.

சிக்கலில் சிற்பி வடித்த சிலையழகை வியந்த மன்னன் தன் கட்டளையை மீறிச் சிற்பி சிலைவடித்ததால் கோபம் கொண்டு சிற்பியின் கட்டை விரலையும் வாங்கி விட்டான்.

"முருகா! உனக்குச் சிலையமைத்த எனக்கேன் இத்துயர்?" என்று சிற்பி நாளும் வாடியபோது எண்கணில் தனக்கு ஓர் சிலையமைக்க உத்திரவிட்டான் வேலன்.

முருகப் பெருமானின் ஆணைப்படியே கட்டை விரலும், கண்ணொளியுமற்ற அச்சிற்பி வேலனை நினைத்து சிலை உருவாக்கும் பணியில் ஈடுபட்டான்.

வேலவனுக்குச் சிலை வடிக்கும் எண்ணத்தையே கண்ணாகக் கொண்டு தன் பணியில் ஈடுபட்டதால் அவ்வூருக்கு "எண்கண்" எனப் பெயர் வந்ததாக அறிகிறோம்.

சிலைமுடியும் தருவாயில் சிற்பிக்கு உதவியாக அவருக்கு அருகிலிருந்த பெண்மணியின் நெற்றியில், சிற்பியின் உளிபட்டு இத்தம் பீறிட்டது.

அப்படிப் பீறிட்ட இரத்தம், சிற்பியின் ஒளியிழந்த கண்களில்பட, சிற்பி இழந்த கண்ணொளியும் பெற்றான். கட்டை விரலையும் மீளப் பெற்றான்.

என்னே எண்கண் முருகப்பெருமானின் அருள்விளையாடல். ★



## திருமாங்கல்யச் சரடு

பெண்கள் புனிதமாக அணிகின்ற திருமாங்கல்ய சரடு ஒன்பது இழைகளைக் கொண்டது. ஒன்பது இழைகளும் ஒன்பது நற்குணங்களைக் குறிக்கின்றன.

1. தெய்வீகக் குணம் (பக்தி)
2. தூய்மைக் குணம்
3. மேன்மை
4. ஆற்றல்
5. விவேகம்
6. தொண்டு
7. தன்னடக்கம்
8. உண்மை
9. உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளல்

# ? பதில்



சுசிலா, செங்கற்பட்டு

**கேள்வி :** *திருநீறு அணியும் போது முப்பட்டைகளாக (திரிபுண்டரம்) இடுவதில் அடங்கியுள்ள கருத்து என்ன என்பதை விளக்கவும்.*

**பதில் :** திருநீறு நெற்றியில் முழுவதும் பரவிஇருக்கும்படி அணிவது உத்தூலனம் எனப்படும். அவ்வாறு அணியாமல் முப்பட்டைகளாகவும் (திரிபுண்டரம்) அணியலாம்.

புருவத்தை ஒட்டியுள்ள முதல்பட்டை உடல்சுத்தம் குறிக்கும். நடுப்பட்டை வாக்குச் சுத்தம் குறிக்கும். மேல்பட்டை மனச்சுத்தம் குறிக்கும்.

மனம், வாக்கு, காயம் மூன்றாலும் தூய்மையுடையவர்கள் என்பதை உணர்த்தும் வகையில் திருநீறு அணியும் போது முப்பட்டைகளாக அணியப்படுகின்றது.

த.இராஜலிங்கம், பள்ளிப்பாளையம்

**கேள்வி :** *நித்தியபூசை, நைமித்திக பூசை என்று வகைப்படுத்துகிறார்களே!. அதன் விளக்கம் என்ன என்பதைத் தெரிவிக்கவும்.*

**பதில் :** திருக்கோயில்களில் தெய்வங்களுக்கு நாளும் நடைபெறும் அன்றாடப் பூசையை நித்திய பூசை (நாட்காலப்பூசை) என்றும், பிரம்மோற்சவம் மற்றும் பண்டிகைக் காலங்களில் நடைபெறும் பூசையை நைமித்திக பூசை (சிறப்புப்பூசை) என்றும் ஆன்றோர்கள் வகைப்படுத்தியுள்ளார்கள்.

சான்று கூற வேண்டுமாயின் பழநி முதலான முருகன் திருக்கோயில்களில் அன்றாடம் பூசை நடைபெறுகிறது.இது நித்திய பூசையாகும்.

அதுவே பங்குனிஉத்திரம் முதலான பண்டிகைக் காலங்களில் நடைபெறுவது நைமித்திக பூசை (விழாக் கால சிறப்புப் பூசை)ஆகும்.

இவ்வாறு நம்முடைய மரபுமுறையில் நாட்காலப் பூசை, விழாக்காலச் சிறப்புப் பூஜை என்று பூஜை இரண்டு வகைகளாக வகுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கா.சுப்பிரமணி, மதுரை

**கேள்வி :** *சிரோன்மணி என்பது என்ன? இது எங்குக் கிடைக்கும்?*

**பதில் :** இது நவமணிகள் போல் பூமியில் விளையக்கூடிய மணி அன்று, சிவயோகிகளுக்கு யோக சக்தியினால் விந்து நழுவாமல் ஊர்த்துவதேசசாக மேலே சென்று நின்று விளங்கினால் அந்தவிந்து சிரோன்மணியாக மாறிவிடும் என்பது ஆன்றோர் தெரிவிக்கும் கருத்தாகும்.

வாரியார் சுவாமிகள் நேபாளத்திற்குச் சென்ற போதுஅங்கிருந்த மடத்தில் ஒரு மகானைச் சந்தித்தார்.

அம்மகான் தம் கழுத்தில் ஒரு வெள்ளிக்குமிழ் அணிந்து இருந்தார். அதற்குள் ஒரு தங்கக்குமிழ் இருந்தது.

அதைத் திறந்து பார்க்கச் சுண்டைக்காய் அளவு வெண்மையான தந்தமணி இருந்தது.

அம்மணியைக் காட்டி மகான் "இதுதான் சிரோன்மணி. இந்த இடத்தில் எனக்குமுன் ஒரு மகான் தவம் செய்து கொண்டு இருந்தார். முடிவில் அவருடைய சிரஸ் வெடித்து இந்த சிரோன்மணி வெளிப்பட்டு வந்தது. அப்படி வந்த மணிதான் இது" என்று காட்டியுள்ளார்.

சிரோன்மணியைக் கால்மாட்டில் வைத்துப் படுத்துக்கொண்டால் அதுவே தலைமாட்டுக்கு வந்துவிடும் என்ற அந்த அதிசயத்தையும் அம்மகான் காட்டித் தங்கக் குமிழிக்குள் வைத்து வெள்ளிக் குமிழிக்குள் பூட்டி அதை அணிந்து கொண்டதாக வாரியார் சுவாமிகள் தம் வாழ்க்கை வரலாற்றில் விவரித்துள்ளார்கள்.

வி.இந்திராணி, இராசிபுரம்.

**கேள்வி :** *இறைவழிபாட்டின்போது தேங்காய் உடைப்பது ஏன்? விளக்கம் தர வேண்டுகிறேன்?*

**பதில் :** தேங்காய் மேலே உள்ள பச்சைமட்டை மாயா மலத்தையும், உரித்து எடுக்கின்ற நார்கள் கன்மமலத்தையும், சன்னதியில் உரித்து உடைத்து எடுக்கும் ஓடு ஆணவ மலத்தையும் சுட்டுவனவாகும்.

இம்மும்மலங்களும் நீங்கினால் தூய உள்ளத்தைக் குறிக்கும் வெண்மையான பருப்பு வெளிப்படுகின்றது. மும்மலமும் நீங்கிப் பக்தர்கள் பரிபக்குவம் பெற்றுவிட்டதைப் உணர்த்தும் அடையாளமாகவே சன்னதிகளில் தெய்வங்களுக்குத் தேங்காய் உடைக்கின்றோம்.

சு. தண்டபாணி, அரக்கோணம்

**கேள்வி :** *கிரகண நேரத்தில் வீட்டு வாசற்படியில் தர்ப்பையைக் கிள்ளி வைக்கக் கூறுகிறார்கள்? அதற்குக் காரணம் கூறமுடியுமா?*

**பதில் :** தர்ப்பையின் மேல் பாகத்தில் பிரம்மாவும், நடுப்பகுதியில் விஷ்ணுவும், அடிப்பகுதியில் சிவபெருமானும் எழுந்தருளி உள்ளார்கள். கிரகண காலத்தில் வீட்டின் வாசற்படியிலும், வீட்டின் உள்ளே நாம் உபயோகிக்கும் எல்லாப் பொருட்களிலும் தர்ப்பையைக் கிள்ளி வைத்து கிரகணம் முடிந்தபிறகு அந்த தர்ப்பையை எடுத்துத் தூரப் போடுவதன் காரணம் என்னவென்றால் எந்தத் தீயசக்தியும்,கெட்ட ஆவியும் அந்தத் தர்ப்பையைத் தாண்டி வரமுடியாது என்பது தான்.

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச் செல்வர்
**டி.வி. வெங்கட்ராமன்,** இ.ஆ.ப.,

சான்றோர்கள் ஞானத்தை அபர ஞானம் என்றும், பர ஞானம் என்றும் தொகுத்தார்கள். பிரபஞ்சத்தைப் பற்றிய ஞானம் அபர ஞானம் ஆகும். உடலும், உடலைச் சேர்ந்த கருவிகளும் புலன்கள் வழியாகப் புறத்தேயிருந்து பெறுவது அபர ஞானம் ஆகும்.

இத்தகைய ஞானத்தை சிற்றறிவு என்றும் சொல்லலாம்.

பரம்பொருளைப் பற்றிய ஞானம் பர ஞானம் ஆகும். இதைப் பேரறிவு என்று சொல்லலாம். இந்த அறிவை புலன்களால் பெற இயலாது. மனம், புத்தி, சித்தம் போன்றவற்றாலும் பர ஞானத்தை பெறுவது அரிது.

திருவருளே பரஞானத்தை உள்ளத்தில் தோற்றுவிக்கும் . அந்த நிலையில் பெறப்படும் அனுபவத்தை முற்றுணர்வு என்றும் சொல்லுவார்கள்.

கிடைப்பதற்கு அரிய ஞானம் பர ஞானம். பல பிறவிகளிலே செய்த தவத்தின் பயனாக இது சாதகனுக்குக் கிடைக்கின்றது.

பல பிறவிகளில் கொடிய வினைகளின் சேர்க்கையை அனுபவிப்பதன் மூலமாக கழித்துக் கொண்டு வரும்போது உலக மாயையைப் பற்றிய விளக்கம் கிடைக்கப்பெற்று உள்ளம் தெளிவடைகிறது.

தெளிவடை,ந்த நிலையில் இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி ஆகியவற்றை ஒரே கண்ணுடன் பார்க்கும் இயல்பு வெளிப்படுகிறது.

இதுகாறும் திரோதன சக்தியாக, மறைப்புச் சக்தியாக உலக அனுபவங்களைக் கொடுத்து வந்த ஆதிபராசக்தி, தனது அருட்சக்தியை வெளிப்படுத்தி, திருவருளை உயிரோடு சேர்த்துக் கொள்கிறது,. அந்த நிலையில் கிடைக்கும் அனுபவங்கள்தான் பரஞானத்திற்கு வித்திடுகின்றன.

இத்தகைய ஞானம் இன்று, நேற்று என்று பெறப்படுவதல்ல. இந்த ஞானத்தை வெறும் முயற்சியால் மட்டும் பெற்றுவிட முடியாது. திருவருள் துணையின்றிச் சிவஞான அனுபவம் கிட்டாது.



திருவருளைப் பெறுவதற்கு பல்வேறு ஒழுக்கங்கள் தேவைப்படுகின்றன. அவற்றையே நம்முடைய சான்றோர்கள் தவம் என்ற தலைப்பில் தொகுத்து வைத்தார்கள். திளைக்கும் வினைக்கடலை தாண்டிவர வேண்டுமென்றால், அதற்கும் அறமும் தவமும் தேவை என்று திருமூலர் பெருமான் வலியுறுத்திச் சொல்லுவார்.

நமது வாழ்க்கையே ஒரு தவமாக அமைய வேண்டுமென்று சான்றோர்கள் விரும்பினார்கள். தவத்தின் வழியேதான் படிநிலை வளர்ச்சி பெறலாம் என்றும் எடுத்துக் காட்டினார்கள். வாழ்க்கையிலே முழுமை காண மனிதன் மேற்கொள்ள வேண்டிய நெறிகளையெல்லாம் அறவியல் என்றும், அறிவியல் என்றும், அன்பு இயல் என்றும் தொகுத்துச் சொன்னார்கள்.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது




**குண்டலினிசித்தர் சமாதி கொண்டுள்ள திருத்தலம்**

**திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலில்** குண்டலினி சித்தர் ஜீவசமாதி ஆகியுள்ளார். இவருடைய சந்நிதியை இத்திருக்கோயிலில் வழிபடலாம்.

ஒரு பழமொழி. உயிரின் வளர்ச்சிக்கு உதவும் பண்புகளைச் சிறு வயது முதற்கொண்டே கற்றுப் பயில வேண்டும் என்பது சான்றோர்கள் நமக்குச் சொன்ன பாடம் ஆகும். அதிலே அறவியல் முதல் இடம் பெறுகிறது.

முதற்கட்டமாக நாம் பெறும் கல்வி பயனுள்ளதாக அமைய வேண்டும். இங்கே கல்விஎன்று சொல்லப்படுவது அபர ஞானமாகிய சிற்றறிவை வளர்ப்பதற்கு மட்டுமல்ல, உலக வாழ்க்கைக்குக் கல்வித் தேவைப்படுகிறது.

அந்தக் கல்வியை பல வகைகளிலும் பெறுகின்றோம். ஆனால், அந்தக் கல்வி நமக்குக் காலம்தோறும் வழித்துணையாக அமைவதில்லை. நமது ஆன்ம வளர்ச்சிக்கு அடிகோலும் கல்வியே பயனுள்ள கல்வியாகும். பரம்பொருளைப் பற்றி சிந்திப்பதற்கும், தெளிவடைவதற்கும், பரம்பொருளை நாடி அடைவதற்கும், வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும் நாம் பெறும் கல்வியே பயனுள்ள கல்வியாகும்.

அத்தகைய கல்வி நமது வினைகளை கழிப்பதற்கு உதவ வேண்டும். அந்தக் கல்வி இறைவனைத் தொழும் விதங்களை தெரிந்துகொள்வதற்கும் உதவ வேண்டும். உடல், இளமை, செல்வம் போன்றவை நிலையற்றவை.

உயிர் உடலைவிட்டுப் பிரியும் நேரத்தை நம்மால் கணிக்க இயலவில்லை. காலம் இருக்கின்ற போதே இறைவனைத் தொழுவதே சாலச் சிறந்தது.

"நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன்றில்லாத மணிவிளக் காமே.."

*(திருமந்திரம்....292)*

நிலையாமையை உணர்ந்து கொண்ட பக்குவ ஆன்மா வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ள விழைகின்றது. வானிலிருந்து பெய்யும் மழையும், மற்ற எல்லா இயற்கை வளங்களும் இறைவனால் தரப்படுபவை. அவற்றைப் பெற்றுத் துய்ப்பதற்கு மக்கள் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

என்னிலும் இனியவனாகிய இறைவன், எனக்கென்று அள்ளிக் கொடுக்கும் போது நானும் அவனை நினைந்து பிற உயிர்களெல்லாம் பயன் அடையும் வகையில் என்னிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

இறைவன் வேண்ட முழுவதும் தருபவன். நாமும் தர வேண்டும். யாவருக்கும் தேவைப்பட்ட அளவுக்குத் தருவதன் வழியாகப் பெறும் இன்பத்திற்கு எல்லையில்லை.

நாம் உண்பதையும், பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். காக்கை தனித்து உண்பது இல்லை. சோறு இட்டவுடன் ஒரு காக்கை பிற காக்கைகளையெல்லாம் கூவி அழைத்து கூட்டமாக உண்ணும் காட்சியே நமக்குப் பாடமாக அமைய வேண்டும்.

"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந் தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே.

*(திருமந்திரம்...250)*

சிறு சீவராசிகள் முதல் இறைவன் வரை நாம் செய்ய வேண்டிய பணிகளெல்லாம் அறம் என்கிற தலைப்பிலேயே அமையும். அறம் என்பது வெறும் சடங்காக மேற்கொள்ளும் முயற்சி அல்ல.

அறத்தின் சிறந்த உண்மைத் தன்மையை உலகுக்கு அறிவித்தவன் மனுநீதிச் சோழன். ஒரு நாள் அவனுடைய அருமை மகன் தேரிலேறி அரசு உலாத் தெருவில் நகர்வலம் செய்த போது ஒரு இளைய பசுக்கன்று திடீரென்று தேர்க்காலின்


திருக்கோயில்

திங்கள் இதழ்




சந்தா விவரம்

தனி இதழின் விலை - ரூ. 10/-
ஓராண்டுச் சந்தா - ரூ. 120/-
பத்து ஆண்டுச் சந்தா - ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா - ரூ. 1500/-
(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பின் பக்க அட்டை வெளிபுறம் (வண்ணத்தில்) | ரூ. 25,000/- |
| 1. | முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 12,000/- |
| 2. | பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. | உள்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 4. | உள்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



## துன்பங்கள் தந்து உன்னை துதிக்கச் செய் கண்ணா!

புண்பட்டால் மனம் பண்படும்.

துன்பங்கள் வந்தால்தான் அத்துன்பங்கள் வாழ்வை நெறிப்படுத்தும்

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" என்பது திருக்குறள்.

"என்னவரம் வேண்டும்?" என்று கேட்ட கண்ணபெருமானிடம் குந்தி "கஷ்டங்கள் தருக!" என்று வேண்டினார்.

"கஷ்டங்கள் வந்தால் தானே கண்ணா! உம்மை நினைக்க முடிகிறது. ஆகவே கஷ்டங்கள் தருக" என்று அதற்கும் விளக்கமும் கூறினார் குந்தி.

இடைப்புகுந்து இறந்து விட்டது. தாய்ப்பசு கண்ணீர் வடித்துக்கொண்டு அரசனுடைய மாளிகை முன் வந்து ஆராய்ச்சி மணியை அடித்தபோது அமைச்சர்களும், புரோகிதர்களும் பசுவதைக்கு பரிகாரமாக பிராயச்சித்தம் செய்யும் வழியை சொன்னார்கள். அதுவும் அறத்தின் அடிப்படையில் அமைந்தது என்றார்கள்.

ஆனால், அரசனோ அறத்திற்கு உண்மை விளக்கம் அளித்தான். அரசனுடைய மாளிகைக்கு வந்துநீதி கேட்கும் பசுவினுடைய துன்பத்தைப் போக்குவது அரசனுடைய கடமை என்றான். பசுவிற்கு ஏற்பட்ட துன்பம் தன் மகனால் ஏற்பட்டது என்பதனால், அந்தத் துன்பத்தை தானே ஏற்றுக்கொள்வது தான் உண்மை அறம் என்ற கூறினான்.

மனுநீதிச் சோழனின் வரலாற்றை திருத்தொண்டர் புராணத்தில் அமைத்துக்கொடுத்த சேக்கிழார் பெருமான் இதை "**அறநெறியின் செவ்விய உண்மைத் திறம்**" என்று வியந்து பேசுகிறார்.

எவ்வுயிரையும் தன் உயிராக உணர்ந்து கொள்வதே அற நெறி நிற்போரின் சிறந்த பண்பாடு. இந்த பண்பை வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது மனதில் தூய்மையும் அன்புமே.

இறைவனை வழிபட படாடோபம் தேவையில்லை என்பார் திருமூலர். ஒரு பச்சிலையே போதும். "**புண்ணியம் செய்வார்க்கு பூ உண்டு நீர் உண்டு**" என்பார். பேசாத நிலையில் உள்ள உயிர்களுக்கு எல்லாம் நாம் செய்யும் உதவி இறைவனுக்கே செய்தது போலாகும்.

நாம் உண்ணும் போதெல்லாம் ஒரு கைப்பிடி உணவைப் பிறருக்குத் தந்து விட்டு, நாமும் உண்பது கடினமல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய உள்ளத்து அன்பைப் பிறருக்குச் சொல்லாது தெரிவிக்கலாமே!. அன்புகலந்த சொற்கள் பகைவரையும் நண்பர்களாக்கிவிடும் அல்லவா? இத்தகைய எளிதான அறநெறி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி அன்பை வளர்க்கும் ஒப்பற்ற சாதனமாகிறது. அன்பின் வழியால் இறைவனை அடைந்து விட முடியும் என்று அருளாளர்கள் வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றனவே!.

"யாவர்க்கும் மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

(திருமந்திரம்....252)

(தொடரும்...)

## வாசகர் எண்ணங்கள்



அஷ்டலட்சுமியர் வண்ணப்படங்களோடு புத்தாண்டு வாழ்த்துகளோடும் கிடைத்த ஜனவரி 2005 திருக்கோயில் இதழ் சர்க்கரைப் பொங்கலெனத் தித்தித்தது.

**- இராஜராஜேஸ்வரி,** கோவை

ஆஞ்சநேயர் ஜெயந்தியைச் சிறப்பித்தது ஸ்ரீ ஆனந்தமங்கலம் ஆஞ்சநேயர் கட்டுரை, இதழின் ஒவ்வொரு பக்கமும் அருமையிலும் அருமை.

**- செந்தில் குமார்,** சேலம்

ஏ.எம்.ஆர். அவர்களின் "கடமைத்தவறா கருநிறத்தான்" ஆரம்பமே விறுவிறுப்பாக உள்ளது. தொடர்ந்து படித்திட ஆவலாக உள்ளேன்.

**- ஜெகதீஸ்வரி,** நாமக்கல்

முன்னைப் பழமைக்கும், முன்னைப் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் மிகுந்த பொலிவுடன் வரும் திருக்கோயில் இதழை ஆர்வமாக எங்கள் வீட்டில் உள்ள அனைவரும் படித்துப் பயன் பெறுகிறோம், பாதுகாக்கிறோம்

**- பி.கே. சந்திரசேகரன்,**
செயலாளர்,
தெய்வீக இயல் இசை மன்றம், ஆதம்பாக்கம்.

# அருள்மிகு பாண்டவதூதப் பெருமாள்

ஸ்ரீ வைஷ்ணவ திருப்பதிகள் 108ல் ஒன்றான காஞ்சிபுரத்துத் திவ்ய தேசங்களுள் பாடகம் என்று பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட அருள்மிகு பாண்டவதூதப்பெருமாள் திருக்கோயில் பல்லவர் காலத்திற்கு முன் கட்டப்பெற்றது. இக்கோயில் 2000 வருஷம் பழமையானதும், பிரசித்தி பெற்றதுமாகும்.

இவ்விடம் கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூதனாய் சென்று 5 வீடாவது கேட்டு வாங்கிவர துரியோதனன் சபைக்குச் சென்ற போது அவன் கண்ணனை அழிப்பதற்குத்தன் அவையில் ஒரு பெரிய நிலவறை அமைத்து அதில் மல்லர்களை ஆயுதபாணிகளாக வைத்தான். நிலவறையின் மேற்புறத்தை மூங்கில்களால் மறைத்து அதன் மீது ஒரு பொய்யாசனம் அமைத்தான்.



கண்ணன் அமரும் பொழுது பொய்யாசனம் சிதைந்து, பெரியவிஸ்வரூபம் எடுத்து மல்லர்களை அழித்தார். பிறகு திருதராட்டிரனுக்கு கண்பார்வை அளித்து தன்னுடைய விஸ்வரூப தரிசனத்தை கண்ணபிரான் அவருக்கு வழங்கினார். மேலும் இத்தலத்தில் அமைந்துள்ள மத்ஸய தீர்த்தத்தில் தவம் செய்த ஜனமேஜயனுக்கும், ஹாரித மாமுனிவருக்கும் இப்பெருமாள் தரிசனம் கொடுத்தார் என்றும் வரலாறு கூறுகிறது.

கண்ணபிரான் பாண்டவர்களுக்காக தூதுபோனதால் பாண்டவர் தூதன் என்ற திருநாமம் பெற்றுள்ளார் என்பது விசேஷமாகும். ஆகையால் இக்கோயிலுக்கு பாண்டவர் தூதப்பெருமாள் திருக்கோயில் எனும் பெயர் விளங்குகிறது.

### இந்திரன் அளித்த சந்தனக்கல்



இந்திரன் தேவயானைக்குச் சீதனமாக அளித்த சந்தனக்கல் திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இரண்டாம் பிரகாத்தில் உள்ளது. இதனைக் கண்டு மகிழலாம். இச் சந்தனைக்கல்லில் அரைக்கப்படும் சந்தனம் சகல நோய்தீர்க்கும் அருமருந்து ஆகும். இதனை உண்டு மகிழலாம்.

### திருமாலின் விசுவரூப தரிசனம்

சுமார் 30 அடி உயரம் கொண்ட பெருமாள் மிகக் கம்பீரமாக விஸ்வரூபத்தில் அமர்ந்த வண்ணம் காணப்படுகிறார். வலது கால் மடித்து இடதுகால் தொங்கவிட்ட நிலையில் உள்ளார். இவ்விடம் கண்ணனுக்குச் சங்கு, சக்கரம் கிடையாது. பாண்டவர்களுக்குத் தூதனாக போனதால் இரண்டு கைகள் மட்டும் உள்ளது. வலது கை வரம் அளிக்கு ஹஸ்தமாகவும், இடது கை அபயஹஸ்தமாகவும் காட்சி அளிக்கின்றார் என்பது விசேஷமாகும்.

பெருமாளின் திருமேனி சுதை திருமேனியாக இருப்பதால் அபிஷேகம் (திருமஞ்சனம்) கிடையாது. சாம்பிராணி தைலக் காப்பு வருடத்திற்கு ஒருமுறை சாத்தப்படுகிறது. காஞ்சிபுரத்தில் 14 திவ்ய க்ஷேத்திரங்களில் கிழக்குமுகமாக பார்த்து அருள் புரிவது இவ்விடம் ஒன்று தான் என்பது விசேஷமாகும். மேலும் இந்தியாவில் கிருஷ்ணனுடைய விஸ்வருபம் மிக அற்புதமாக விளங்குவதும் இக்கோயிலில் மட்டுமே.

- ஏ. கிருஷ்ணன்



# பாம்பன் சுவாமிகளின் வியத்தகு ஜீவகாருண்யம்

பாம்பன் சுவாமிகள் ஒருமுறை திருநெல்வேலிக்கு அருகில் இருக்கும் சிக்கராசையன் கிராமத்தில் நயினார்ப் பிள்ளை என்னும் அன்பர் வீட்டில் தங்கியிருந்தார்.

அப்பொழுது பகலில் ஒரு மூட்டைப் பூச்சி சுவரின் துவாரத்திலிருந்து வெளிப்பட்டு விரைந்து சென்றது.

"மூட்டைப் பூச்சியைப் பிடித்து வெளியிற்கொண்டுபோய் விடுக" என அவ்வீட்டுச் சிறுவனிடம் உரைத்தார் சுவாமிகள்.

ஆனால் அச்சிறுவன் மூட்டைப் பூச்சியைப் பிடித்ததும் அதனை நசுக்கிக் கொன்று விட்டான்.

அதைக் கண்டு பெரிதும் வருந்திய சுவாமிகள் "குழந்தாய்! கொலை செய்தனையே! என் மனம் வருந்துகின்றதே!" எனக்கூறி அந்நாள் முழுவதும் அவ்வீட்டு அன்பர்கள் வேண்டியும் உணவு உட்கொள்ள மறுத்துவிட்டார்.

"இறப்பு நிகழ்ந்துள்ளது. இன்று உணவு உண்ணோம்" என்று மறுத்துரைத்து மறுநாள் உச்சிப்போதில் மட்டுமே உணவு உட்கொண்டார் பாம்பன் சுவாமிகள்.

ஒரு மூட்டைப் பூச்சி மடிந்ததற்காக உணவு உட்கொள்ள மறுத்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் ஜீவகாருண்யத்தை என்னென்று வியப்பது!.

## ருக்மணி தாயார் தரிசனம்

இக்கோயிலில் பெருமாளுக்கு வலதுபுறம் ருக்மணிதாயாருக்கும், இடது பக்கம் சக்கரத்தாழ்வார் ஆகியோருக்கும் தனித்தனியாக சந்நிதிகள் உள்ளன. பெருமாள் விமானத்தில் சக்கரம் அமைக்கப்பட்டுள்ளதால் சக்ரவிமானம் என்று அழைக்கப்படுகிறது. தாயார் ருக்மணி உபயநாச்சியார் ஸ்ரீதேவி பூதேவி .பெருமாள் நின்ற கோலத்தில் உள்ளார். இடது பக்கம் உள்ள சக்கரத்தாழ்வார் சந்நிதியில் சக்கரத்தாழ்வார் முன் பக்கமும், பின்பக்கம் யோக நரசிம்மரும் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அருளாளப் பெருமான்

இத்திருக்கோயிலில் அருளாளப் பெருமான் எம்பெருமானார் என்கிற ஆசாரியார் எழுந்தருளியிருப்பது விசேஷமாகும். இவர் பூர்வத்தில் யக்ஞமூர்த்தி என்கிற திருநாமம் பூண்டு இராமானுஜரோடு 18 நாள் வாதம் செய்து பிறகு அவருடைய உபதேசங்களால் நெஞ்சுருகி அவருடைய திருவடிகளில் சரணடைந்து பின் அனேக மகான்களுக்கு ஆச்சாரியராக விளங்கிவந்தார். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஞானசாரம், பிரமேயசாரம் என்கிற இருகிரந்தங்களை அருளியவர். இவரது பரணி நட்சத்திரத்தில் கார்த்திகை மாதம் பிரதி வருஷம் மிகச் சிறப்பான முறையில் சாற்றுமறை உற்சவம் நடந்து வருகிறது. மேலும் பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மற்றும் அருளாளப் பெருமான், எம்பெருமாள் ஆகியோரது சிலைகளும் உள் பக்கத்தில் இடது பக்கம் உள்ளன.

## ஆலயத்திருவிழாக்கள்

ஆவணிமாதம் கிருஷ்ண ஜெயந்தியும், ஐப்பசி மாதம் தீபாவளி அன்றும் கருடசேவை நடைபெறுகிறது. ஐப்பசி மாதத்தில் தீபாவளி அன்று கருடசேவை நடப்பது இக்கோயிலில் மட்டும்தான் என்பது விசேஷமாகும். மேலும் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி அன்றும் கருடசேவை நடைபெறுகிறது. வருடத்தில் 2 தடவை கருடசேவை நடப்பது விசேஷமாகும். நவராத்திரி ஒன்பது நாட்களும் தாயாருக்கு விசேஷ பூஜையும் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு அலங்காரமும் நடைபெறுகிறது.

இத்திருக்கோயிலின் விமானத்திற்கு வடபக்கத்தில் உள்ள கல்வெட்டுகளில் இக்கோயிலின் பெயர் பாடகம் என்றும், முதலாம் குலோத்துங்கச் சோழனால் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

காஞ்சிபுரம் பஸ்நிலையத்தில் இருந்து தெற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயிலுக்கு தென்மேற்கே அரைகிலோமீட்டர் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது. பஸ் மூலமாகவும், ரயில் மூலமாகவும் காஞ்சிபுரத்திற்குச் செல்லலாம். வைகுண்ட ஏகாதசி திருநாளில் இத்தலம் வந்திருந்து கண்ணனின் விஸ்வரூப தரிசனத்தை கண்குளிரக் கண்டு தரிசித்தால் பூமியிலேயே ஒரு வைகுண்ட தரிசனத்தைப் பெற்ற பாக்கியம் பெறலாம். ★



# நாலாயிரத்தில் நாங்கூர் திவ்யதேசங்கள்

**ஜி. இராஜநாயகம்**, பி.எஸ்.சி.,பி.எல்.,
இணைஆணையாளர், மயிலாடுதுறை



ஸ்ரீதிருமணிக்கூடம் வரதராஜர் பெருமாள்



ஸ்ரீ மாதவப் பெருமாள்



ஸ்ரீ காவளம்பாடி கண்ணன் பெருமாள்



ஸ்ரீ புருஷோத்தமப் பெருமாள்



ஸ்ரீ வைகுண்டநாதர் பெருமாள்



ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள்

காவிரிநதி பாய்ந்தோடும் சோழவளநாட்டில் சீர்காழி திவ்ய தேசத்திற்கருகில் உள்ள திருக்குறையலூரிலே மயர்வறமதிநலம் அருளப்பெற்ற நற்கலியனாம் பரகாலன் என்று சிறப்பிக்கப்பட்ட திருமங்கைஆழ்வார் அவதரித்து, அருளிச் செய்த பிரபந்தப் பாசுரங்களில் சீராட்டப்படும் திருநாங்கூர் திவ்விய தேசங்களில், "நந்தாவிளக்கே அளத்ததற்கு அரியாய் நரநாரணனே" என்று நாங்கூர் மணிமாடக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ நாராயணப் பெருமாளையும்,

"வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர் வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே," என்று வைகுந்தவிண்ணகரமான ஸ்ரீ வைகுந்தநாதப்பெருமாளையும் "அருவிடங்கள் பொழில் தழுவி எழில் திகழும் நாங்கூர் அரிமேயவிண்ணகரம் வணங்குமட நெஞ்சே" என்று திருக்குடமாடும் கூத்தரையும்,

"தடமண்ணித் தென்கரைமேல் மாதவன் தானுறையுமிடம் வயல் நாங்கை" என்று ஸ்ரீ மாதவப்பெருமாளையும்,

"மாடமாளிகை சூழ் திருநாங்கூர் வண்புருசோத்தமமே" என்று ஸ்ரீ புருஷோத்தம பெருமாளையும்,

"சிறப்புடை மறையோர் நாங்கை நன்னடுவுள் செம்பொன் செங்கோயிலுள்ளே" என்று சிறப்பித்த ஸ்ரீ செம்பொன்னரங்கரையும்

"சேற்றளையில் வெண்முத்தம் சிந்தும் நாங்கூர் திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே" என்று சிறப்பித்து

ஸ்ரீ பள்ளிகொண்டபெருமாளையும், "திருமகள் மருவும் நாங்கூர் திருமணிக்கூடத்தானே" என்று திருமணிக்கூடமான ஸ்ரீ வரதராஜரையும்,

"பூவளம் பொழில்கள் சூழ்ந்த புரந்தரன் செய்த நாங்கை காவளம்பாடிமேய கண்ணனே களைகண்நீயே" என்று கோபாலனாம் காவளம் பாடி கண்ணனையும்,

"திண்ணா மதிள் சூழ் திருவெள்ளக்குளத்துள் அண்ணா. அடியேனிடரைக்களையாயே" என்று அண்ணன் கோயில் திருவெள்ளக்குளம் ஸ்ரீ அண்ணன் பெருமாளையும், "தேவதேவனென்றொன்றோதி பாலின் நல்லமென் மொழியாள் பார்த்தன் பள்ளி பாடுவாளே" என்று சீராட்டிய பார்த்தன்பள்ளி ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாளையும், சீர்மிகு பாசுரங்களால் அருளிப்பாடு செய்து உலகோருக்கு அருளும் சிறப்புமிகு 11 திவ்யதேசங்களும் ஒரே ஊரின்கண் அடுத்தடுத்து அமையப்பெற்றுள்ளது இத்திருநாங்கூர் திவ்விய தேசங்களாகும்.



## தாயை வணங்க வேண்டும்

### தாயிற்சிறந்ததோர் கோயிலும் இல்லை

உலகை ஆறுமுறை வலம் வருவதை விடவும், கங்கையில் பத்தாயிரம் முறை குளிப்பதை விடவும் , தாயை ஒரு முறை பக்தியுடன் வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் அதிகம்.

- அருளரசு டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்



ஸ்ரீ நாராயணப்பெருமாள்



ஸ்ரீ செம்பொன்னரங்கர் பெருமாள்



ஸ்ரீ அண்ணன் பெருமாள்



ஸ்ரீ குடமாடு கூத்தர் பெருமாள்



ஸ்ரீ பள்ளிகொண்ட பெருமாள்



ஸ்ரீ மணவாள மாமுனிகள்

நாங்கூர் திவ்விய தேசங்களை ஸேவிக்கும் போது பத்திரிகாசிரமத்தை ஸேவித்த பலனை திருநாங்கூர் ஸ்ரீ நாராயணனும்,

கோவர்த்தன கிரியை ஸேவித்த பலனை ஸ்ரீகுடமாடு கூத்தராகிய எம்பெருமாளும்,

ஸ்ரீரங்கம் திவ்ய தம்பதிகளை ஸேவித்தபலனை ஸ்ரீ திருத்தெற்றியம்பலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபள்ளிகொண்ட ரெங்கநாதப்பெருமாளும்,

அயோத்தியில் ஸ்ரீராமபிரானை ஸேவித்தபலனை ஸ்ரீவண் புருஷோத்தமரும்,

ஸ்ரீவைகுண்டம் எம்பெருமானை ஸேவித்த பலனை ஸ்ரீ வைகுண்டநாதர் பெருமாளும்,

திருநாராயணபுரம் எம்பெருமானை ஸேவித்த பலனை ஸ்ரீசெம்பொன்னரங்கரும்,

எம்பெருமான் ஸ்ரீ ஏழுமலையானை தரிசித்த பலனை ஸ்ரீ அண்ணன்பெருமாளும்,

திருவிடந்தை ஸ்ரீ நித்யகல்யாணபெருமாளை ஸேவித்தபலனை ஸ்ரீமாதவப்பெருமாளும்,

காஞ்சி வரதரை ஸேவித்த பலனை திருமணிக்கூடப்பெருமாள் ஸ்ரீ வரதராஜரும் அருள்கிறார்கள்.

துவாரகைக் கண்ணன் இங்கே காவளம் பாடியில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்.

பார்த்தன்பள்ளி ஸ்ரீ பார்த்தசாரதியை ஸேவிக்கும் பலன் குருக்ஷேத்திரத்தில் ஸேவித்த பலனை அளிக்கிறது.

திவ்விய தேசங்களான திருநாங்கூர் திருத்தலங்களின் பதினோரு பெருமாள்களும் பெரிய திருவடியான கருட வாகனத்தில் ஒரே நாளில் திருநாங்கூர் மணிமாடக்கோயிலான எம்பெருமான் ஸ்ரீ நாராயணபெருமாள் கோயிலில் 09.02.2005 அன்று ஒருசேர எழுந்தருளி அருள்பாலிக்கும் 11 கருட சேவை திருவிழா பரமானந்தம் அளிக்கக்கூடிய பேரானந்தத் திருவிழாவாகும்.

ஆன்மீக பெருமக்கள் அனைவரும் வாருங்கள், பெருமாளின் திவ்யசொரூபங்களைக் கண்டு பேரருளைப் பெற்று பேரானந்தம் அடையுங்கள்,

ஓம் நமோ நாராயணாய!! ★

# கடமை தவறா கருநிறத்தான்



"ஜோதிடச் சக்கரவர்த்தி"
**ஏ.எம். ராஜகோபாலன்**

கண்ணனை ஏழரை சனிச் பிடித்துக் கொண்ட காலத்தில், பஞ்ச பாண்டவர்கள் வன வாசத்தில்(காடுகளில் வசிப்பது) இருந்தனர். கண்ணனுக்கு சதா அவர்கள் பற்றியே கவலை. அடிக்கடி காட்டிற்குச் சென்று, கஷ்டப்படும் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வருவது வழக்கம்.

அவ்விதம், காட்டிற்குச் செல்லும் போதெல்லாம், தன் அண்ணன் பல ராமனிடமும், தேவிருக்மிணியிடமும் கூறி, விடை பெற்றுக் கொண்டு, தான் இல்லாத நாட்களில் ராஜ்ஜிய விவகாரங்களை எவ்விதம் கவனிக்க வேண்டும் என்பது பற்றி, அதிகாரிகளுக்கு விளக்கி விட்டே செல்வார்.

ஆனால், சனீஸ்வரனின் ஏழரைக் கால பிடிப்பினால் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், திடீரென்று ஒருமுறை புறப்பட்டுக் சென்று விட்டார் - வனத்தில் வசித்து வந்த பாண்டவர்களைப் பார்ப்பதற்காக.

**சத்திராஜித்**

கண்ணனின் நிலை இவ்வாறிருக்க, விதி வேறு இடத்தில் தன் விளையாட்டைத் தொடங்கியது - சனியின் ஆதிக்கத்தால்.



சத்திராஜித் என்றொரு மன்னன்; அதிக பலவான். நீதி, தர்மம் தவறாது ஆட்சிசெய்து வந்தவன். ஒரு சமயம், தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த மிகப் பெரிய யுத்தத்தில் தோற்றுவிடும் நிலை ஏற்பட்டது. அப்போது, இந்திரனின் வேண்டுகோளை ஏற்று, இந்த சத்ராஜித் மன்னன், தனது மிகப்பெரிய சேனையுடன் வந்து, அசுரர்களைத் தோற்கடித்து, தேவர்களுக்கு வெற்றிக் கனியைப் பறித்துத் தந்தான்.

அதனால், தேவேந்திரனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் நன்றி உணர்வும் காட்டாற்று வெள்ளம் போல், இதயத்தில் கரை புரண்டு ஓடியது.

சத்ராஜித் மன்னனை ஆரத் தழுவித் கொண்ட இந்திரன், தன்னிடம் இருந்த, விலை மதிப்பற்ற ஸ்யமந்தகம் என்ற அற்புதமான மணியை, பரிசாக அவன் கழுத்தில் அணிவித்தான்.

**ஸ்யமகந்தகத்தின் பெருமை**

தேவர்களும், அசுரர்களும், அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்தபோது, பல, அரிய, உயர்ந்த பொருட்களும், மற்றவைகளும் கிடைத்தன. அவற்றில் ஒன்று ஸ்யமந்தகம் .

முதலில் ஸ்ரீமகாலட்சுமி தோன்றி, எம்பெருமானான ஸ்ரீமந்நாராயணனின் திருமார்பினை அலங்கரித்தாள். அவளுக்கு அடுத்தபடியாக, நவநிதிகளும் தோன்றி, ஸ்ரீமகாலட்சுமியின் திருவடிகளை அடைந்தன. அதன் பின்பு, பாஞ்சசன்னியம் என்ற, ஒளி பொருந்திய தெய்வீகச் சங்கு கிடைத்தது. அதனை, பகவான் ஸ்வீகரித்துக் கொண்டான். (எடுத்துக் கொண்டான்)

இவற்றிற்குப் பின்பு தோன்றிய, ஐராவதம் எனும் பல துதிக்கைகள் கொண்ட, வெள்ளை நிறயானை, உச்சைசிரவஸ் என்ற வானத்தில் பறக்கும் திறன் கொண்ட குதிரை, கற்பக விருட்சம், ஸ்யமந்தகம் என்ற விசேஷ ஒளியும், திவ்ய சக்தி பொருந்திய மணியையும் தேவேந்திரன் எடுத்துக் கொண்டான்.

**ஸ்யமந்தகம்**

ஸ்யமந்தகம் என்ற மணி, அளவற்ற ஒளியும், தெய்வீக சக்தியும் பொருந்தியது. அது இருக்கும் இடத்தில் நவநதிகளும் அஷ்ட ஐஸ்வரியங்களும் பொங்கும். பெறற்கரிய இந்த மணியைத் தான் இந்திரன், சத்திராஜித் மன்னனுக்குப் பரிசாக அளித்தான்.

பூவுலகம் திரும்பிய சத்திராஜித் அத்தெய்வீக மணியை தனது அளவற்ற அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய தம்பி பிரஸேனன் என்பவனின் கழுத்தில் அணிவித்திருந்தான்.

பாரதத்தின் மன்னர்கள் அனைவருக்குமே இந்த ஸ்யமந்தக மணியின் மீது ஒரு கண்!. பிரஸேனனின் மீதும் பொறாமை.

இந்த அதிர்ஷ்டக்கார பிரஸேனனைப் பற்றி நாம் சற்றுத் தெரிந்து கொள்வோம்.

துவாபர யுகத்தில், மல்யுத்தத்தில் சிறந்த மன்னர்கள் மூவர் இருந்தனர்.

அவர்களில் ஒருவர் ஸ்ரீ கிருஷ்ணன்.




1) ஸ்ரீ அக்னி துர்க்கை
2) ஸ்ரீ ஜல துர்க்கை
3) ஸ்ரீ விஷ்ணு துர்க்கை
4) ஸ்ரீ வன துர்க்கை
5) ஸ்ரீ சூலினி துர்க்கை
6) ஸ்ரீ மஹா துர்க்கை
7) ஸ்ரீ பிரும்ம துர்க்கை
8) ஸ்ரீ ருத்ர துர்க்கை
9) ஸ்ரீ ஸ்தூல துர்க்கை

இரண்டாவது திருதராஷ்டிர மன்னரின் மைந்தனான துரியோதனன். மூன்றாவது இந்தப் பிரஸேனன். இம்மூவர்களில் ஒருவர்தான் மற்ற இருவர்களையும் மல்யுத்தத்தில் தோற்கடிக்கவோ அல்லது கொல்லவோ முடியும் என்ற அளவிற்குப் பராக்ரமம் பெற்றிருந்தனர்.



## பிரஸேனன் மரணம்

ஒரு சமயம், பிரஸேனன், காட்டில் வேட்டையாடச் சென்றான். அப்போது எதிர்ப்பட்ட பெரிய சிங்கம் ஒன்றைத் தன் குதிரையின் மேல் ஏறித் துரத்திச் சென்றான். காட்டினுள் சிங்கத்தைத் துரத்தியவாறு, வெகுதூரம் சென்று விட்டான். அவனது வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், அவனது சேனை பின் தங்கி விட்டது.

ஓடிக் கொண்டே சென்ற சிங்கம், திடீரென்று எதிர்பாராதவிதமாக திரும்பி, பிரஸேனனின் குதிரை மீது பாய்ந்து தாக்கியது. குதிரையும் அதன் மேல் அமர்ந்திருந்த பிரஸேனனும் தரையில் வீழ்ந்தனர். சிங்கம், பிரஸேனனைக் கடித்துக் குதறிக் கொன்று விட்டது. அப்போதும் அவன் அந்த ஸ்யமந்தக மணியை அணிந்திருந்தான்.

வழி தவறி அவனைத் தேடிய சேனை, அவனைக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பிவிட்டது.

## ஜாம்பவான்!

திரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரான் தன் அவதாரகாரியம் முடிந்து, ஸ்ரீ வைகுண்டம் திரும்பிய பின்பு, பரம ராமபக்தரான ஜாம்பவான் தன் பெண் ஜாம்பவதியுடன் அந்த காட்டில் ஒரு குகைக்குள் ராம தியானம் செய்தபடி, வசித்து வந்தார். தற்செயலாக பிரசேனன் இறந்து இடந்த இடத்தைப் பார்த்துவிட்ட அவர், அந்த ஸ்யமந்தக மணியை எடுத்து வந்து, தன் பாசத்திற்குஉரிய பெண் ஜாம்பவதியின் கழுத்தில் அணிவித்திருந்தார்.

## ஏழரைச் சனியின் பிடியில் கண்ணன்!

இது இவ்வாறு இருக்க, துவாரகையில் சனி பகவானைக் கண்ட கண்ணனுக்கு திடீரென்று, காட்டில் வனவாசம் செய்து கொண்டிருந்த பஞ்ச பாண்டவர்களைப் பார்த்துவர வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

உடனே, அந்த அரண்மனை வாயிலில் இருந்தே நேராக, பாண்டவர்கள் இருந்து வந்த காட்டிற்குச் சென்று விட்டார்.

எப்பொழுதுமே, எங்கு சென்றாலும், தன் தேவி ருக்மணியிடமும், அண்ணன் பலராமனிடமும் சொல்லிவிட்டுச் செல்வது தான் கண்ணன் வழக்கம். ஆனால் ஏழரைச் சனியின் பிடிப்பால் (விளைவாக) எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல், பாண்டவர்கள் இருந்த காட்டிற்குச் சென்றுவிட்டார். கண்ணனின் மனதைப் பொறுத்தவரையில் இவ்விதம் அவர் வேண்டும் என்றே செல்லவில்லை. பாண்டவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் தான், அவ்வாறு அவசரமாகச் சென்று விட்டார்.

## சனிபகவானுக்கு மகிழ்ச்சி!

பரமனாகவே இருந்தாலும், பலித்துவிட்டதே தன்பலம் என்று!!

இவ்விதம், எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல், கண்ணன் காட்டிற்குச் சென்றதே, அவருக்கு வினையாகி விட்டது!!!.

தொடரும்...

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர்,
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

# ரெப்கோ வங்கி

★ சேவை ★ சேமிப்பு ★ பாதுகாப்பு

**ரெப்கோ வங்கி** 1969-ஆம் ஆண்டு, தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வுக்கெனத் துவங்கப்பட்டது. உறுப்பினர்களிடமிருந்து முதலீடு பெறுவது. பல்வேறு தொழில் புரிவோருக்கு உதவும் விதமாக கவர்ச்சிகரமான கடன் திட்டங்களைச் செயல்படுத்துவது மூலம், ரெப்கோ வங்கி இன்று தென் இந்தியாவின் முக்கிய நகரங்களில் 35 கிளைகளாக செவ்வனே சேவை புரிகிறது.

## ரெப்கோவின் தனிச் சிறப்பம்சங்கள் :

- இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கூட்டுறவு வங்கி நிறுவனம்.
- இந்திய ஆட்சிப்பணியாளர்கள் (IAS) மற்றும் வங்கித்துறை வல்லுநர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவின் வழிகாட்டுதலின் படி இயங்குகிறது.

## ரெப்கோ வங்கியின் சிறப்பான சேவை :

- கனிவான, விரைவான, மனநிறைவான வாடிக்கையாளர் சேவை.
- முதலீடுகளுக்கு (Deposits) மற்ற வங்கிகளைவிட கூடுதல் வட்டி.
- உங்களது முதலீட்டையும், கடனையும் இருப்பிடத்திலிருந்தே தினசரி செலுத்தும் வசதி.
- வியாபரா அபிவிருத்திக்கடன் மற்றும் அடமானக் கடன் ரூபாய் 7.50 இலட்சம் வரை.
- வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப எளிய வட்டியில் பல கவர்ச்சிகரமான கடன் திட்டங்கள்.
- விரைவான வீட்டுக் கடனிற்கு ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் (Repco Home Finance).
- இந்திய ஆயுள் காப்பீட்டு LIC நிறுவனத்தின் பல்வேறு திட்டங்கள்.
- ராயல் சுந்தரம் நிறுவனத்தாரின் பல்வேறு காப்பீடு (General Insurance) திட்டங்கள்.
- குறிப்பிட்ட கிளைகளில் பாதுகாப்புப் பெட்டக வசதி.

## கவர்ச்சிகரமான கடன் உதவித் திட்டங்கள்:

- வியாபார அபிவிருத்திக் கடன் ✱ நகைக் கடன் ✱ கட்டிட அடமானக்கடன் ✱ தொழில் புரிவோருக்கும், மற்றும் பிள்ளைகளின் படிப்பிற்கும், திருமணச் செலவிற்கும் கடன் வழங்கி உதவும் திட்டம் ✱ வாகனக் கடன் (கார்,2-சக்கர,3-சக்கர வாகனம் வாங்க) ✱ LIC/NSC/KVP பத்திரங்கள் மேல் கடன் வசதி ✱ குழு கடன் வசதி (Group Loan) ✱ முதலீட்டின் (Deposit) மேல் கடன் வசதி

## முதலீடுகளுக்கு அதிக வட்டி : 3.5% - 7.25% p.a.

- தினசரி இட்டுவைப்பு (Daily Deposit)
- ஒரு வருடம் முதல் ஐந்து வருடங்கள் வரை
- **சேமிப்புக் கணக்கு**
- **வைப்பு நிதி மற்றும் ஊறுணி வைப்பு நிதி (மாதாந்திர வட்டி)**
- 46 நாட்கள் முதல் ஐந்து வருடங்கள் வரை
- **கேஷ் சர்ட்டிஃபிகேட் :** ஒரு வருடம் முதல் மூன்றாண்டு வரை
- **தொடர் இட்டு வைப்பு** (Recurring Deposit)
- ஒரு வருடம் முதல் ஐந்தாண்டு வரை
- **முதியோர்களின் வைப்பு நிதிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்தை விட 0.5% கூடுதல் வட்டி வழங்கப்படும்**

வளர்க எங்களுடன்

(வட்டி விகிதம் மாறுதலுக்கு உட்பட்டது)

**ரெப்கோ வங்கி**

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி

(இந்திய அரசு நிறுவனம்)

தலைமை அலுவலகம் : ரெப்கோ டவர், 33, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை-17.

தொலைபேசி : 044-28342845 / 0715, Fax : 28344037,

E-mail : ho@repcobank.co.in, Website : repcobank.co.in

பதிவு எண் : TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
வெளியிடும் 'திருக்கோயில்' இதழ்
மேன் மேலும் சிறந்து விளங்க
எங்களின் வாழ்த்துக்கள்.

R.**நம்பிவேல்,** ஒப்பந்தக்காரர், இராமேஸ்வரம்
P.N.**சுந்தரம்**, ஒப்பந்தக்காரர், இராமேஸ்வரம்
M. **சரவணன்**, ஒப்பந்தக்காரர், இராமேஸ்வரம்



நல்வாழ்த்துக்கள்
**ஜெயலெட்சுமி மில்ஸ்**
திருவில்லிப்புத்தூர்